தமிழ் நாடு
இயல் இசை
நாடக மன்றம்

கலைமாமணி

விருது வழங்கும் விழா

சிறப்பு மலர் 1999

சிறந்த கலைஞர்களுக்கு

கலைமாமணி விருது வழங்கும் விழா

கலைவாணர் அரங்கம், சென்னை - 2.

20.11.1999

சிறப்பு மலர்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

கலை பண்பாட்டுத் துறை

(தமிழக அரசுச் சார்புடையது)

''பொன்னி'' 31, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை, சென்னை - 600 028.

தொலைபேசி எண் : 4937471

மேதகு தமிழக ஆளுநர்

நீதிபதி. **எம். பாத்திமா பீவீ** அவர்கள்

(காப்பாளர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்)

மாண்புமிகு தமிழக முதல்வர்

கலைஞர் அவர்கள்

தமிழருக் கின்னாளில் பாதுகாப்பாகவே
தனியாக நிற்கும் ஒருவன்
மாதங்கள் முழுவதும் உழைக்கின்ற செம்மையால்
வளமாக ஒளிரும் மதியே
வானெனவும் கடலெனவும் வளர்கங்கை நதியெனவும்
வாழியவே கருணை நிதியே!

- கவியரசு கண்ணதாசன்



மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,
இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்

முனைவர் **திரு. மு. தமிழ்க்குடிமகன்** அவர்கள்



திரு. இராம நாராயணன்

தலைவர்

திரு. கி. சொர்ணம்

உறுப்பினர் - செயலாளர்

திரு. சு. இராமகிருட்டிணன், இ.ஆ.ப

துணைத் தலைவர்

(அரசுச் செயலாளர், தமிழ் வளர்ச்சி - பண்பாடு
இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை)

திரு. த.இரா. சீனிவாசன், இ.ஆ.ப

பொருளாளர்

(சிறப்பு ஆணையர்,
கலை பண்பாட்டு இயக்ககம்)

கலைமாமணி விருது பெறும் கலைஞர்கள்

1.	பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்	-	இயற்றமிழ்க் கலைஞர்
2.	திரு. ஈரோடு தமிழன்பன்	-	இயற்றமிழ்க் கவிஞர்
3.	தவத்திரு தெய்வ சிகாமணி பொன்னம்பல தேசிகர்	-	இயற்றமிழ்ச் சொற்பொழிவாளர்
4.	திரு. கீரனூர் சி. குருராமலிங்கம்	-	குரலிசைக் கலைஞர்
5.	கழுகுமலை திரு. ஏ. கந்தசாமி	-	குரலிசைக் கலைஞர்
6.	திருமதி. திருவாரூர் என். பாலம்	-	வயலின் ஆசிரியை
7.	செல்வி. எம். லலிதா	-	வயலின் கலைஞர்கள்
8.	செல்வி. எம். நந்தினி		
9.	திரு. டி. ஆர். சாம்பசிவன்	-	வீணைக் கலைஞர்
10.	திரு. வி. நஞ்சுண்டையா	-	புல்லாங்குழல் கலைஞர்
11.	திரு. ஸ்ரீமுஷ்ணம் வி. ராஜாராவ்	-	மிருதங்கக் கலைஞர்
12.	திரு. திருவாரூர் டி.என். ருத்ராபதி	-	நாதசுரக் கலைஞர்
13.	திரு. பூவாளூர் பி.ஆர். நாகராஜன்	-	நாதசுரக் கலைஞர்
14.	திருப்புன்கூர் திரு. டி.ஜி. முத்துக்குமாரசாமி	-	தவில் கலைஞர்
15.	திருக்கருகாவூர் திரு. டி. சிவகுருநாதன்	-	தவில் ஆசிரியர்
16.	திரு. டி.வி. மீனாட்சிசுந்தரம்	-	திருமறை தேவார இசைக் கலைஞர்
17.	திரு. வி.கே.டி. பாலன்	-	பண்பாட்டுக் கலை பரப்புநர்
18.	திரு. ஆர். ராமச்சந்திரன்	-	பண்பாட்டுக் கலை பரப்புநர்
19.	திருமதி. சரோஜா வைத்தியநாதன்	-	பரதநாட்டிய ஆசிரியை
20.	செல்வி. ஹேமா ஸ்ரீபால்	-	பரதநாட்டியக் கலைஞர்
21.	திருமதி. பார்வதி ரவி கண்டசாலா	-	பரதநாட்டியக் கலைஞர்
22.	திருமதி. பத்மினி துரைராஜன்	-	பரதநாட்டியக் கலைஞர்
23.	டாக்டர் மஞ்சுளா லுஸ்டி நரசிம்மன்	-	நடனக் கலை பரப்புநர்
24.	திரு. தஞ்சை அ. நடராஜன்	-	பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர்
25.	திரு. டி.கே. மாரியப்பன்	-	நாடக நடிகர்
26.	திருமதி. 'பசி' சத்யா	-	நாடக நடிகை
27.	திரு. எஸ். கஜேந்திர குமார்	-	நாடக ஆசிரியர்
28.	திருச்சி திரு. டி.எஸ். சிவப்பிரகாசம்	-	தொழில் முறையல்லாத நாடக நடிகர்
29.	திரு. அர்ஜுன்	-	திரைப்பட நடிகர்
30.	செல்வி. ரம்யா கிருஷ்ணன்	-	திரைப்பட நடிகை
31.	திரு. லிவிங்ஸ்டன்	-	திரைப்பட குணச்சித்திர நடிகர்

32. திருமதி. எஸ். ராதாபாய் - திரைப்பட குணச்சித்திர நடிகை

33. திரு. ஆர். சுந்தர்ராஜன் - திரைப்பட நகைச்சுவை நடிகர்

34. திருமதி. டி.பி. முத்துலட்சுமி - திரைப்பட நகைச்சுவை நடிகை

35. திரு. கோவை செழியன் - திரைப்படத் தயாரிப்பாளர்

36. திரு. ஆர். விக்கிரமன் - திரைப்பட இயக்குநர்

37. திரு. தங்கர்பச்சான் - திரைப்பட ஒளிப்பதிவாளர்

38. திரு. ஆர். செல்வராஜ் - திரைப்பட கதாசிரியர்

39. திரு. பிறைசூடன் - திரைப்படப் பாடலாசிரியர்

40. திரு. எஸ்.என். சுரேந்தர் - திரைப்படப் பின்னணிப் பாடகர்

41. திருமதி. நித்யஸ்ரீ மகாதேவன் - திரைப்படப் பின்னணிப் பாடகி

42. திரு. எஸ்.ஏ. ராஜ்குமார் - திரைப்பட இசையமைப்பாளர்

43. திரு. ஆர். சுந்தரமூர்த்தி - திரைப்பட ஒப்பனைக் கலைஞர்

44. திரு. கே.ஏ. சொக்கலிங்க பாகவதர் - இசை நாடக நடிகர்

45. திருமதி. எம்.எஸ். ரேணுகா தேவி - இசை நாடக நடிகை

46. திரு. மதுரை இரா. குப்பண்ணா - இசை நாடக மிருதங்கக் கலைஞர்

47. திரு. சி. பாலகிருஷ்ணன் - தெருக்கூத்துக் கலைஞர்

48. திருமதி. இரணியூர் ஏ. லட்சுமி - கரகக் கலைஞர்

49. திரு. எஸ். பரமசிவம் - காவடிக் கலைஞர்

50. திரு. ஏ. மூக்கையா - நையாண்டி மேள நாதசுரக் கலைஞர்

51. திரு. ஆர். சுந்தரம் - நையாண்டி மேள தவில் கலைஞர்

52. திரு. கருமுத்து தியாகராஜன் - கிராமியப் பாடலாசிரியர்

53. திருமதி. எஸ். சரசுவதி - கிராமிய இசைக் கலைஞர்

54. கழுகுமலை திருமதி. ஜி. முத்துலட்சுமி - வில்லிசைக் கலைஞர்

பொற்கிழி பெறும் கலைஞர்கள்

1. 'கலைமாமணி' திரு. கே.ஆர். முத்துவீர் பிள்ளை - தவில் கலைஞர்
2. 'கலைமாமணி' திரு. சோ. பெருமாள் கோனார் - கிராமியப் பாடலாசிரியர்

சிறந்த கலை நிறுவனம்

கம்பன் கழகம், சென்னை

சிறந்த நாடகக் குழு

'கலைமாமணி' திரு. தில்லைராஜன் அவர்களின் 'நாடக மந்திர்'

கலைமாமணி விருது பெறும்
இயற்றமிழ்க் கலைஞர்
பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியார்

எண்ணற்ற விருதுகளும், ஏராளமான பரிசுகளும் பெற்று இயற்றிமிழின் காவலர்களில் ஒருவராகத் திகழும் பேராசிரியர் டாக்டர். ந. சுப்புரெட்டியார் அவர்கள், 1916-ஆம் ஆண்டு திருவாளர் ஞானி நல்லப்பரெட்டியார் - திருமதி. காமாட்சியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர்.

தனது எண்பத்து மூன்று கால தமிழ்ப்பணியில் இவர் புரிந்திருக்கும் சாதனைகள் ஏராளமாகும். எம்.ஏ., பி.எஸ்ஸி., எல்.டி., பி.எச்டி., வித்வான் ஆகிய படிப்புப் பட்டங்களைப் பெற்ற இவர், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தால் ''அருங்கலைக்கோன்'' பண்ருட்டி வைணவ மாநாட்டில் ''ஸ்ரீசடகோபன் பொன்னடி'', மதுரை, காமராசர் பல்கலைக் கழகத்தால் ''தமிழ்ப் பேரவைச் செம்மல்'', சென்னை ஆழ்வார் ஆய்வு மையத்தால் ''இராமானுசர் விருது'', சென்னை கம்பன் கழகத்தினரால் ''பேராசிரியர் இராதாகிருட்டிணன் விருது'', ''இராசா சர் முத்தையா விருது'', தமிழக அரசின் ''திரு.வி.க. விருது'' ஆகிய விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவராவார். இவர் சிறந்த நூல்களுக்கான ஒன்பது பரிசுகளையும் பெற்றிருக்கிறார்.

பள்ளித் தலைமை ஆசிரியராகவும், பல கல்லூரிகளில் தமிழ்த்துறை தலைவராகவும், சென்னை பல்கலைக் கழகத்தில் தமிழ் இலக்கியத் துறை பேராசிரியராகவும், தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் தலைமைப் பதிப்பாசிரியராகவும், தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மரபு-வழிப் பண்பாட்டு நிறுவனத்தின் இயக்குநராகவும் பல்லாண்டுகள் பணியாற்றிய பேராசிரியர் திரு.ந. சுப்புரெட்டியார் அவர்கள், இலக்கியம், சமயம், தத்துவம், அறிவியல், வாழ்க்கை வரலாறு, ஆராய்ச்சி, கல்வி, உளவியல் துறைகளில் 120-க்கும் மேற்பட்ட அரிய நூல்களைத் தமிழுலகிற்குத் தந்த அவரது எழுத்துப் பணி பெரும் பாராட்டுக்குரியது.

அவரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்
இயற்றமிழ்க் கவிஞர்
திரு. ஈரோடு தமிழன்பன்

திருமிகு. செ.இரா. நடராசன் - திருமதி வள்ளியம்மாள் தம்பதியருக்குப் புதல்வராகப் பிறந்த திரு. ஈரோடு தமிழன்பன் அவர்களின் கவிதைகள் தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்ப்பவையாகும்.

இளம் பருவம் முதலே கவிதை ஈடுபாடு கொண்ட இவர், 19 கவிதை நூல்கள் உள்ளிட்ட 30 நூல்களை இதுவரை எழுதிப் பெருமை சேர்த்துள்ளார்.

''தமிழன்பன் கவிதைகள்'' என்ற இவரது முதல் கவிதைத் தொகுப்பு 1973-ம் ஆண்டு தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்றது. அது முதற்கொண்டு இவரது கவிதைப்பணி இவருக்குப் பெற்றுத் தந்த சிறப்புகள் ஏராளமாகும்.

ஈரோடு, தமிழ் இலக்கியப் பேரவை இவரது தமிழ்ப்புலமையைப் பாராட்டி, தங்கப் பதக்கம் வழங்கிச் சிறப்பித்தது. 1990-ல் பாவேந்தர் 'பாரதிதாசன் விருது', 1997-ல் இவரது சிறுகதைத் தொகுதிக்காக பாரத ஸ்டேட் வங்கியின் முதல் பரிசு, 1998-ல் முரசொலி அறக்கட்டளையின் 'கலைஞர் விருது' போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

1998-ல் புதுடெல்லி சாகித்ய அகாதமியின் பொதுக்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்று பணி புரிந்து வருகிறார். இவரது கவிதை நூல்கள் சாகித்ய அகாதமி, ஞானபீடம், மத்திய அரசின் இந்தி மொழி மேம்பாட்டுத் துறை ஆகியவற்றாலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

1978-ல் டெல்லியில் நடைபெற்ற தேசிய கவி சம்மேளனத்தில் பங்கு பெற்றுள்ளார். 1996-ல் அமெரிக்க நாட்டில் இலக்கியப் பயணம் மேற்கொண்ட திரு. ஈரோடு தமிழன்பன் அவர்கள், மும்பை, கல்கத்தா, நாகபுரி, அந்தமான் தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்று பெரும் பணியாற்றியுள்ளார்.

அவரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்
இயற்றமிழ்ச் சொற்பொழிவாளர்

குன்றக்குடி திரு. பொன்னம்பல அடிகளார்

திருமிகு கே.எஸ். சுப்பிரமணியம்-திருமதி. முத்துலட்சுமி அம்மாள் தம்பதியருக்குப் புதல்வராகப் பிறந்த தவத்திரு குன்றக்குடி தெய்வசிகாமணி பொன்னம்பல அடிகளார் அவர்கள், தனது முப்பத்தைந்து வயதிலேயே சமயச் சொற்பொழிவுகளாலும், இலக்கியப் பேருரைகளாலும்' தமிழார்வம் மிக்க அன்பு நெஞ்சங்களில் நீங்காத இடம் பெற்றுள்ளார்.

1964-ம் ஆண்டில் பிறந்த இவர், இந்தக் குறுகிய காலத்திலேயே எண்ணற்ற சொற்பொழிவு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பெரும் பணியாற்றி உள்ளார்.

வானொலியிலும் தொலைக்காட்சியிலும் பல தொடர் நிகழ்ச்சிகளை வழங்கி, அறிவார்ந்த நேயர்களைத் தன் வயப்படுத்திய திரு. பொன்னம்பல அடிகளார் அவர்கள், தனது சமயக் கட்டுரைகளாலும், இலக்கிய ஆராய்ச்சிகளாலும் தமிழுலகில் தனக்கென ஒரு நல்லிடத்தை உருவாக்கியுள்ளார்.

இலக்கிய உலகில் தனிப்பெருமை பெற்றுவிட்ட புதுக்கவிதைகள் பலவற்றை புனைந்து தனது தமிழார்வத்தை - தமிழ்த் திறனை தமிழக ரசிகப் பெருமக்களுக்கு வழங்கி வருகிறார்.

தமிழ் வளர்ச்சி - பண்பாடு - சமயத் தொண்டு போன்ற பல்வேறு அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு, தொடர்ந்து இலக்கியப்பணி புரிந்து வருகிறார், குன்றக்குடி திரு. பொன்னம்பல அடிகளார் அவர்கள்.

அவரது தமிழ்த் தொண்டினைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

குரலிசைக் கலைஞர்

திரு. கீரனூர் குருராமலிங்கம்

பாரம்பரியமிக்க இசைக் குடும்பத்தில் பிறந்த திரு. கீரனூர் குருராமலிங்கம் அவர்களின் தந்தையார் சின்னத்தம்பி பிள்ளை அவர்கள், பிரபல நாதசுவர வித்வானாவார். தனது இளம் வயதிலேயே இசைத்துறையில் தன்னை இணைத்துக் கொண்ட திரு. குருராமலிங்கம் அவர்கள், வயலின் மேதை குத்தாலம் சிவவடிவேல் பிள்ளை, மிருதங்க வித்வான் மன்னார்குடி நடேச பிள்ளை, முகர்சிங் கலைஞர் மன்னார்குடி ஆறுமுகம் பிள்ளை, கஞ்சிரா கலைஞர் மாயூரம் பட்டுப் பிள்ளை ஆகிய விற்பன்னர்களுடன் இணைந்து ஒன்பதாவது வயதிலேயே தன்னுடைய இசை அரங்கேற்றத்தை நிகழ்த்தினார் என்பது பெரும் சிறப்புக்குரியதாகும்.

ஆயிரக் கணக்கான இசை நிகழ்ச்சிகளில் பாடியுள்ள திரு. குருராமலிங்கம் அவர்கள், இசை மேதை சித்தூர் சுப்ரமணிய பிள்ளை தலைமையில், சிதம்பரம் திரு.சி.எஸ். ஜெயராமன் அவர்கள், தனக்கு தம்புரா பரிசளித்ததையும், ''இயற்கை இன்ப இசை இளவல்'' என்ற பட்டம் வழங்கியதையும் பெரும் பேறாகக் கருதுகிறார்.

மேலும், அவர் 'தமிழிசைச் செம்மல்', 'தென்றலிசைக் கொண்டல்', 'தமிழிசைக் கலாமணி' போன்ற சிறப்புப் பட்டங்கள் அளித்து கௌரவிக்கப்பட்டுள்ளார்.

திரு. குருராமலிங்கம் அவர்கள் இசையமைத்துப் பாடிய 'சிலப்பதிகார நாட்டிய நாடக'த்தின் ஒலி நாடாவும், நீதியரசர் திரு. பு.ரா. கோகுல கிருட்டிணன் அவர்கள் தலைமையில் இசையமைத்துப் பாடிய குமரகுருபரரின் 'மீனாட்சியம்மை குறம்' நாட்டிய நாடகமும் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.

தமிழ் மொழிப் பாடல்களைத் தவிர, வேறு எந்த மொழிப் பாடல்களையும் பாடுவதில்லை என்ற கொள்கையுடன் இசைப் பணி புரிந்துவரும் திரு. குருராமலிங்கம் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ''கலைமாமணி'' விருது வழங்குவதில் பெருமை கொள்கிறது.

kalaimamani



கலைமாமணி விருது பெறும்
குரலிசைக் கலைஞர்
கழுகுமலை திரு. ஏ. கந்தசாமி

அருணகிரி நாதரின் திருப்புகழாலும், அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்தாலும் சிறப்பு பெற்ற தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலையில், இசை வேளாளர் குடும்பத்தில், திரு. ஆறுமுகம் பிள்ளை - திருமதி. பொன்னம்மாள் தம்பதியருக்கு 1932-ல் புதல்வராகப் பிறந்த கழுகுமலை திரு. ஏ. கந்தசாமி அவர்கள், இளம் பருவத்திலேயே இசையில் நாட்டம் உள்ளவராக விளங்கினார்.

திரு. ஏ. கந்தசாமி அவர்கள், தனது 12-வது வயதிலேயே திரைப்பட இயக்குநர் திரு. ஏ.பி. நாகராஜன் அவர்களின் 'பாலமுருகன் பாய்ஸ் கம்பெனி'யில் வேலன், வேடன், நாரதர்-வேடம் அணிந்து பாடி நடித்து ஒன்பது ஆண்டுகள் புகழுடன் பணியாற்றினார். சேலம் மாடர்ன் தியேட்டர்ஸின் 'ஆதித்தன் கனவு' திரைப்படத்தில், திரு. ஜி. ராமனாதன் அவர்களின் இசை அமைப்பில் அவர் பாடிய பாடல்கள் பெரும் சிறப்பைப் பெற்றது.

ஆர்மோனியக் கலைஞர் திரு. சங்கரதாஸ் அவர்களிடமும், இசை மேதை மதுரை டாக்டர் திரு. சீதாராமய்யர் அவர்களிடமும் முறையாக இசை பயின்ற திரு. ஏ. கந்தசாமி அவர்கள், பத்மஸ்ரீ கலைமாமணி இசைப் பேறிஞர் திரு. மதுரை சோமசுந்தரம் அவர்களுடன் இசை நிகழ்ச்சிகளில் 12 ஆண்டுகள் பாடி பெருமை பெற்றார்.

நெல்லை, அகில இந்திய வானொலியில் இசைக் கலைஞர்களைத் தேர்வு செய்யும் நீதிபதியாகப் பணியாற்றியுள்ளார், திரு. ஏ. கந்தசாமி அவர்கள்.

அவர் பாடியுள்ள 'வள்ளலார் திருவருட்பா' ஒலிநாடாவாக வெளிவந்து பெரும் பாராட்டையும் பெற்றுள்ளது. திரு. ஏ. கந்தசாமி அவர்களின் இசைத் திறமையைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

வயலின் ஆசிரியர்

திருமதி. என். பாலம்

திருமிகு. ஆர். நாகராசன் - திருமதி என். சரஸ்வதி தம்பதியருக்கு 1942-ம் ஆண்டு புதல்வியாகப் பிறந்த திருமதி. என். பாலம் அவர்கள், தனது தாயாரையே ஆரம்ப கால ஆசிரியையாகக் கொண்டு வயலின் பயின்று, தனது எட்டாவது வயது முதலே அத்துறையில் விற்பன்னரானார்.

பிறகு, திருவாரூர் திரு. தியாகராஜ தேசிகரிடமும் வயலின் இசை பயின்று, தனது பத்தாவது வயதிலேயே திருச்சி வானொலி நிலையத்தில் சிறுவர் இசை மேடை நிகழ்ச்சியில் வயலின் தனிக் கச்சேரி செய்துள்ளார்.

சுமார் 20 ஆண்டுகள் திருவாரூர் ஜி.ஆர்.எம். பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் வயலின் ஆசிரியராகவும், 13 ஆண்டுகள் சென்னை வானொலி நிலையத்தில் வயலின் கலைஞராகவும், இந்திய நுண்கலைக் கழகத்தின் சார்பில் சிங்கப்பூரில் 2 ஆண்டுகள் வயலின் ஆசிரியராகவும் பணியாற்றி உள்ள திருமதி. என். பாலம் அவர்கள், தென் ஆப்பிரிக்கா, மொரீஷியஸ், இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலும் வயலின் தனி இசை நிகழ்ச்சி நடத்தி பெருமை பெற்றுள்ளார்.

''வயலின் இசை வல்லி'', ''நாதக் கனல்'' போன்ற பட்டங்களை தில்லையாடி அருணாசலக் கவிராயர் இலக்கியப் பேரவையும், டாக்டர் கலைஞர் சேவை இயக்கமும் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

புல்லாங்குழல் இசை மேதையான டாக்டர். என். ரமணி அவர்களின் சகோதரியான திருமதி என். பாலம் அவர்கள், காலம் சென்ற திரு. எம். எம். தண்டபாணி தேசிகர், டாக்டர் எஸ். ராமநாதன், பம்பாய் சகோதரிகள், டாக்டர் சேலம் ஜெயலட்சுமி, சிக்கல் சகோதரிகள், மணி கிருஷ்ணசாமி போன்றவர்களது கச்சேரிகளிலும் வயலின் வாசித்து புகழ்பெற்றார். திருமதி. என். பாலம் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்
வயலின் கலைஞர்கள்

செல்வி. லலிதா
செல்வி. நந்தினி

'வயிலின் இரட்டையர்' என்று புகழ்பெற்றுள்ள செல்வி. எம். லலிதா, செல்வி. எம். நந்தினி இருவரும் இளவயது சகோதரிகள். இவர்களது தந்தை திருமிகு. முத்துசாமியும் - தாயார் திருமதி. சுப்புலட்சுமி அம்மாளும் பாரம்பரியமிக்க இசைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

செல்வியர் லலிதா - நந்தினி இருவருமே தங்களது தாத்தாவான வயலின் மேதை திரு. வி. லட்சுமி நாராயணன் அவர்களிடம் வயலின் பயின்று, இளம் வயதிலேயே இசை அரங்கில் பல நிகழ்ச்சிகளை நடத்தி பெறும் பாராட்டுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

லலிதா-நந்தினி சகோதரிகள் அமெரிக்கா, நார்வே, சிங்கப்பூர் மற்றும் பல வெளிநாடுகளிலும் இசை நிகழ்ச்சிகள் நடத்தி, தமிழ் நாட்டின் கலைச் சிறப்பை நிலை நாட்டியுள்ளார்கள்.

லண்டன் 'டிரினிடி காலேஜ் ஆப் மியூசிக்' நடத்தும் மேற்கத்திய இசையிலும் தேர்ச்சி பெற்றுள்ள இருவரும், மேற்கத்திய - இந்திய இசையுடன், மற்ற உலக இசையையும் இணைத்து, புதிய இசை வடிவினை அமைத்து வெற்றிகரமாக நிகழ்ச்சிகள் நடத்திவரும் முதல் பெண்மணிகள் என்ற புகழுக்கும் உரியவர்கள்.

'இன்னிசை ஞான கலா மணிகள்', 'சாயி கான மணிகள்', 'யுவ கலா பாரதி', 'நாத விநோதினி' போன்ற பட்டங்களையும், ஏராளமான பரிசுகளையும் பெற்றுள்ளனர், லலிதா-நந்தினி சகோதரிகள்.

சென்னை பல்கலைக் கழகத்தில் இந்திய இசையில் ஆராய்ச்சி (பி.எச்டி) செய்து கொண்டிருக்கும் லலிதா அவர்களுக்கும், ஆங்கில இலக்கியம், இந்திய இசை, ஆகியவற்றில் பி.ஏ. பட்டம் பெற்றுள்ள நந்தினி அவர்களுக்கும் தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்
வீணைக் கலைஞர்
திரு. டி.ஆர். சாம்பசிவன்

திருமிகு. டி.என். குமாரசாமி சாஸ்திரி - திருமதி சீதாலட்சுமி தம்பதியருக்கு 1959-ம் ஆண்டு புதல்வராகப் பிறந்த திரு. டி.ஆர். சாம்பசிவன் அவர்கள் பி.காம். பட்டதாரியாவார்.

சிறுவயது முதல் அவரது தந்தையிடமே வீணை பயின்ற அவர், பிரபல வீணைக் கலைஞர் திருமதி. இரங்கநாயகி இராசகோபாலன் அவர்களிடமும் பயிற்சி பெற்றார்.

பல சபாக்களில் வீணை கச்சேரிகள் நடத்தி பெரும் புகழ் பெற்ற அவர், 1988 முதல் 1994 வரை சிங்கப்பூர் நுண்கலைக் கழகத்தில் வீணை விரிவுரையாளராகப் பணிபுரிந்து வந்துள்ளார். அப்போது அவரிடம் பயின்ற பல மாணவர்களைக் கொண்டு சிங்கப்பூரில் வீணை இசை நிகழ்ச்சிகள் நடத்தி பெருமை பெற்றார்.

பிரான்ஸ், ஜெர்மனி, மலேசியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கும் சென்று தனது வீணை இசையால் பெரும் புகழ் பெற்ற திரு.டி.ஆர். சாம்பசிவன் அவர்கள், அந்த நாடுகளிலும் பல மாணவர்களுக்குப் பயிற்சி தந்திருக்கிறார்.

வானொலியிலும், தொலைக்காட்சியிலும் தொடர்ந்து வீணை கச்சேரிகள் நிகழ்த்தி வந்த அவரை, தமிழ்நாடு அரசு, சென்னை இசைக் கல்லூரியில் வீணை விரிவுரையாளராக பணியில் அமர்த்தியது. 1997 முதல் அப்பணியில் ஈடுபட்டுள்ள அவரின் சிறந்த பயிற்சியினால் இன்று பல வீணைக் கலைஞர்கள் உருவாகியிருக்கிறார்கள்.

அவரது கலைச் சேவையைப் பாராட்டி, தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

புல்லாங்குழல் இசைக் கலைஞர்

திரு. வி. நஞ்சுண்டைய்யா



திரு. வேணுகோபால் ரெட்டி அவர்களின் புதல்வராக மைசூரில் 7-11-1926-ல் பிறந்த திரு. வி. நஞ்சுண்டைய்யா அவர்கள், அவரது தந்தையாரையே குருவாகக் கொண்டு புல்லாங்குழல் இசை பயின்று, 1946-ம் ஆண்டு கோவை சென்டிரல் ஸ்டூடியோவில் இசைத் துறையில் பணியாற்றினார். அப்போது அவர் காலம் சென்ற திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் கதாநாயகனாக நடித்த ராஜகுமாரி, வால்மீகி, முருகன், கிருஷ்ண விஜயம் முதலிய படங்களின் இசையமைப்பில் புல்லாங்குழல் வாசித்துள்ளார்.

பிறகு சென்னை வந்த அவர், ஜெமினி ஸ்டூடியோவில் சந்திரலேகா, ஔவையார், சக்கரதாரி, மிஸ். மாலினி போன்ற பிரபல படங்களுக்கும் பணியாற்றியுள்ளார். தமிழ் மட்டுமின்றி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, ஒரியா, சிங்களம் போன்ற பிற மொழித் திரைப் படங்களிலும் இவரது புல்லாங்குழல் இசை ஒலித்திருக்கிறது.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் புல்லாங்குழல் வாசித்து, பிரபல திரைப்பட இசையமைப்பாளர்களான திருவாளர்கள் எஸ்.எம். சுப்பையா நாயுடு, எஸ். ராஜேஸ்வர ராவ், எம்.டி. பார்த்தசாரதி, விசுவநாதன்-இராமமூர்த்தி, எஸ்.வி. வெங்கட்ராமன், ஜி. ராமனாதன், கே.வி. மகாதேவன், டி.ஆர். பாப்பா, கண்டசாலா, சத்தியம், தேவராஜன், டி.ஜி. லிங்கப்பா, ரமேஷ் நாயுடு, இளையராஜா ஆகியோரோடு நெருங்கிப் பணியாற்றிய திரு. வி. நஞ்சுண்டைய்யா அவர்கள் புகழ் பெற்ற இசை வல்லுநர்களான திருமதி. எம்.எஸ். சுப்புலட்சுமி, திரு. மகாராஜபுரம் சந்தானம், திரு. பாலமுரளி கிருஷ்ணா, சீர்காழி திரு. கோவிந்தராஜன் ஆகியோருடன் மேடைக் கச்சேரிகளில் புல்லாங்குழல் வாசித்திருக்கிறார்.

இந்தியா மட்டுமின்றி, இவரது குழலிசை அமெரிக்கா, ரஷ்யா, மேற்கு ஜெர்மனி, தென்னாப்பிரிக்கா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளிலும் ஒலித்திருக்கிறது.

அவரது கலைத் தொண்டினைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கி கௌரவிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

மிருதங்கக் கலைஞர்

ஸ்ரீமுஷ்ணம் திரு. வி. ராஜாராவ்

திருமிகு. வெங்கடரமண ராவ் - திருமதி. சீதாபாய் தம்பதியருக்கு 1955-ம் ஆண்டு மகனாகப் பிறந்த ஸ்ரீமுஷ்ணம் திரு. வி. ராஜாராவ் அவர்களின் குடும்பம் நான்கு தலைமுறையாக கர்நாடக இசையில் புகழ் பெற்றது.

திரு. ராஜாராவ் அவர்கள் தனது தந்தையாரிடமும், குடந்தை திரு. ராஜப்ப ஐயரிடமும் மிருதங்கப் பயிற்சி பெற்று, தனது 7-வது வயதிலேயே இசை நிகழ்ச்சிகளில் மிருதங்கம் வாசிக்க ஆரம்பித்துள்ளார்.

1975-ம் ஆண்டு முதல் தொடர்ந்து அமெரிக்கா, பிரான்ஸ், ஐரோப்பா, சுவிட்சர்லாந்து, கனடா, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் நடந்த இசை நிகழ்ச்சிகளில், புகழ்பெற்ற இசை மேதைகளான தஞ்சை திரு. கல்யாணராமன், புல்லாங்குழல் திரு. மகாலிங்கம், டாக்டர் திரு. ரமணி, திரு. வீணை பாலசந்தர், திரு. டி.என். சேஷகோபாலன், திரு. மகாராஜபுரம் சந்தானம், திரு. மாண்டலின் சீனிவாசன், டாக்டர் திருமதி. எம்.எல். வசந்தகுமாரி, திருமதி. எம்.எஸ். சுப்புலட்சுமி, திருமதி. டி.கே. பட்டம்மாள் போன்ற முன்னணி இசை மேதைகளின் நிகழ்ச்சிகளில் மிருதங்கம் வாசித்துள்ளார்.

'மிருதங்க பூபதி', 'நாத ஒலிரத்னம்', 'இசைக் கடல்', 'சங்கீத கைங்கர்ய சிரோமணி', 'நாதக் கனல்', 'சங்கீத ரத்னாகரா', 'ரசிக கலாரத்னா', 'சங்கீத கலா சூடாமணி', 'திருப்புகழ் மாமணி' - போன்ற பல பட்டங்களை இந்தியா மற்றும் வெளிநாடுகளில் பெற்றிருக்கும் ஸ்ரீமுஷ்ணம் திரு. வி. ராஜாராவ் அவர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பு செய்கிறது.

கலைமாமணி விருது பெறும்

நாதசுரக் கலைஞர்

திரு. டி.என். ருத்ராபதி



திருமிகு நடேசன் - திருமதி. பட்டம்மாள் தம்பதியரின் புதல்வராக 1936-ம் ஆண்டு பிறந்த திரு. டி.என். ருத்ராபதி அவர்கள், தனது 5-வது வயது முதலே நாதசுரம் பயின்று வந்துள்ளார்.

திருவாரூர் நாதசுர மேதை திரு. டி.எஸ். ராஜரத்தினம் பிள்ளை அவர்களிடமும், திருமெய்ஞானம் திரு. டி.பி. நடராஜ சுந்தரம் பிள்ளை அவர்களிடமும் முறையாகப் பயின்ற அவர், 50 ஆண்டுகளாக நாதசுர இசை நிகழ்ச்சிகள் நடத்தி வருகிறார்.

தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் உள்ள பல கோயில்களிலேயும் பல விழாக்களிலேயும் இவரது நாதசுர இசை ஒலித்திருக்கிறது.

கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களுக்கும், இலங்கைக்கும் சென்று நாதசுர இசை நிகழ்ச்சிகள் நடத்திய அவர், பல இளம் சிறார்களுக்கும் இக் கலையில் பயிற்சி அளித்து வருகிறார். அவரிடம் தற்போது இருபதுக்கும் அதிகமான மாணவர்கள் நாதசுரப் பயிற்சி எடுத்து வருகிறார்கள்.

நாதசுரக் கலையில் இன்று உள்ள குறிப்பிடத் தக்க சிலரில் ஒருவராகத் திகழ்கின்ற திரு. டி.என். ருத்ராபதி அவர்கள், 50 ஆண்டு காலமாக இந்தக் கலையில் ஈடுபட்டு, தனக்குப் பின்னாலும் ஒரு தலைமுறையை உருவாக்கும் சீரிய பணியினைச் செய்து வருகிறார்.

அவரது இசைச் சேவையைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

நாதசுரக் கலைஞர்

பூவாளூர் திரு. பி.ஆர். நாகராஜன்

கடந்த 30 ஆண்டுகளாக இசைத் துறையில் நாதசுர கலைப் பணியினைச் செய்து வரும் பூவாளூர் திரு. பி.ஆர். நாகராஜன் அவர்கள், காலம் சென்ற திருமிகு. ம. இராமலிங்கம் - திருமதி. இரா. நாகம்மாள் தம்பதியரின் புதல்வராவார்.

இவரது தந்தையார் பூவாளூர் திரு. ம. இராமலிங்கம் அவர்களிடமும், அதற்குப் பிறகு நாதசுர மாமேதை புதுச்சத்திரம் திரு. பி.கே. முத்து வீருசாமி பிள்ளை அவர்களிடமும் முறைப்படி பயின்ற அவரது நாதசுர இசை கேளாத திருத்தலங்களே இல்லை என்ற அளவிற்கு இறைப் பணியிலும் ஈடுபட்டுள்ளார். பல பாராட்டுகளையும், விருதுகளையும் பெற்றுள்ளார்.

குமார வயலூர் கந்தர் சஷ்டி விழாவின் நிறைவு நாளன்று அவருக்கு 'நாதசுர இசைச் செல்வன்' என்ற பட்டமும், திருச்சி, மலைக்கோட்டையில் உள்ள இஷ்டசித்தி விநாயகர் கோயில் விழாவில் 'நாதசுர இசைச் சுடர்' என்ற பட்டமும் வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள்.

திருச்சி, கோழிக்கோடு, கோவை, சென்னை மற்றும் புதுடெல்லி வானொலி நிலையங்களும், சென்னை தொலைக்காட்சி நிலையமும் இவரது நாதசுர இசையை பலமுறை வழங்கியிருக்கிறது.

பூவாளூர் திருமூல நாதசுவாமி திருக்கோயிலில் நிரந்தரக் கலைஞராகப் பணியாற்றி வருகிற திரு. பி.ஆர். நாகராஜன் அவர்களின் நாதசுர இசை கேளாத பொது நிகழ்ச்சிகளே இல்லை என்று சொல்லும் அளிவிற்கு புகழ் பெற்றவராவார்.

இவரது இசைச் பணியைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

தவில் கலைஞர்

திருப்புன்கூர் திரு. டி.ஜி. முத்துக்குமாரசாமி

திருமிகு. டி.கே. கோவிந்தராசன் - திருமதி. ஜி. சரோஜா தம்பதியினரின் மகனாகப் பிறந்த திருப்புன்கூர் திரு. டி.ஜி. முத்துக்குமாரசாமி அவர்கள், தனது 37 வயதிற்குள்ளேயே தமிழகம் முழுவதும் மட்டுமின்றி, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, மகாராஷ்ட்டிரா, டெல்லி முதலிய மாநிலங்களிலும் பல வெளிநாடுகளிலும் தவில் வாசித்து சிறந்த கலைஞராக புகழ் பெற்றுள்ளார்.

இலங்கையில் ஆடிவேல் திருவிழா, ரஷ்யாவிலும், மொரீஷியசிலும் இந்தியப் பண்பாட்டுக் கலைவிழா மட்டுமல்லாமல், அமெரிக்காவில் பல நிகழ்ச்சிகளிலும் தவில் வாசித்து, 'இசை மாமுரசு', 'இன்ப கலா திலகம்', 'கற்பனை கலாநிதி', 'சொற் சுவை நாதப் பேரொளி', 'இளம் சக்கரவர்த்தி', 'தவில் கலா மேதை', 'தவில் லய வாத்ய சிம்மம்', 'நுண்மதி நாதலய நல்மணி', 'மங்கள இசை மாமணி' போன்ற ஏராள பட்டங்களைப் பெற்றுள்ளார்.

திருவாளர் நாமகிரிப்பேட்டை கிருட்டிணன், மதுரை திரு. எம்.பி.என். சேதுராமன் - பொன்னுசாமி, திரு. ஏ.கே.சி. நடராசன், காலம் சென்ற திருவெண்காடு சுப்ரமணியப் பிள்ளை, திரு. ஷேக் சின்ன மௌலானா ஆகியோருக்குத் தவில் வாசித்து பெருமை பெற்ற திருப்புன்கூர் திரு. டி.ஜி. முத்துக்குமாரசாமி அவர்கள், திருவாளர்கள் தவில் இசை மேதை அரிதுவாரமங்கலம் திரு. ஏ.கே. பழனிவேலு, திருவாளப்புத்தூர் திரு. டி.எஸ். கலியமூர்த்தி ஆகியோருடனும் இணைந்து தவில் வாசித்துள்ளார்.

அவருடைய இசைச் சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

தவில் ஆசிரியர்

திரு. டி.டி. சிவகுருநாதன்

திருச்சி மாவட்ட அரசு இசைப் பள்ளியில் தற்போது தவில் ஆசிரியராகப் பணிபுரிந்து வரும் திருக்கருகாவூர் திரு. டி.டி. சிவகுருநாதன் அவர்கள், 1961-ம் ஆண்டு திருமிகு. டி.ஜி. தட்சிணாமூர்த்தி பிள்ளை - செண்பகவல்லி தம்பதியருக்குப் புதல்வராகப் பிறந்தவர். தவில் மேதையான தனது தந்தையிடமும் கீவளூர் குஞ்சு சிங்காரவேல் பிள்ளை, கலைமாமணி டி.ஆர். கோவிந்தராஜன் ஆகியோரிடமும் பயின்ற அவரது அரங்கேற்றம் 14-வது வயதில் நடைபெற்றது.

மிகக் குறுகிய காலத்தில் மிகச் சிறந்த வித்வானான திரு.டி.டி. சிவகுருநாதன் அவர்கள், திருவாளர்கள் நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், டாக்டர் ஷேக் சின்னமௌலானா, மதுரை M.P.N. சேதுராமன் - பொன்னுசாமி சகோதரர்கள், திருமெய்ஞானம் டி.பி. நடராஜ சுந்தரம் பிள்ளை, இஞ்சிக்குடி இ.பி. கந்தசாமி பிள்ளை, கோட்டூர் கே.என். ராஜரத்தினம் - வீராசாமி சகோதரர்கள், திருப்பாம்புரம் டி.கே.எஸ். சாமிநாதன் - மீனாட்சி சுந்தரம் சகோதரர்கள் போன்ற நாதசுர மேதைகளுக்கும், மற்றும் கிளாரினெட் மேதை திரு.ஏ.கே.சி. நடராஜன் அவர்களுக்கும் தவில் வாசித்துள்ளார்.

தவில் வித்வான்களான வலங்கைமான் சண்முகசுந்தரம் பிள்ளை, திருக்கோயில் முத்துக் குமாரசாமி பிள்ளை, வடபாதிமங்கலம் தட்சிணாமூர்த்தி பிள்ளை, அரித்துவாரமங்கலம் ஏ.கே. பழனிவேல், திவாளப்புத்தூர் டி.ஏ. கலியமூர்த்தி, தஞ்சை டி.ஆர். கோவிந்தராஜன், வேதாரணியம் வி.ஜி. பாலசுப்பிரமணியம், திருநாகேஸ்வரம் டி.ஆர். சுப்பிரமணியம் ஆகியோருடனும் இணைந்து வாசித்து ஈடில்லா புகழை ஈட்டியுள்ளார்.

திருவையாறு தமிழிசைச் சங்கத்தினரால் 'இசை மாமுரசு' என்ற பட்டமும், கல்கத்தா ஸ்ரீ சாஸ்தா சமூகம் சபாவினரால் 'தவில் பேரொளிச் செல்வம்' என்ற பட்டமும், சேலம் நாதசுரம் தவில் கலைஞர்கள் சங்கத்தால் 'தவில் மகுட ரத்தினம்' போன்ற பல்வேறு பட்டங்களைப் பெற்றுள்ள திருக்கருகாவூர் திரு. டி.டி. சிவகுருநாதன் அவர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்

திருமுறை தேவார இசைக் கலைஞர்

திரு. டி.வி. மீனாட்சிசுந்தரம்

ஏராளமான அரங்கங்களிலும் எண்ணற்ற திருக்கோயில்களிலும் இசை நிகழ்ச்சிகளில் பாடி, தனது இனிய குரல் வளத்தால் எல்லா திசைகளிலும் ரசிகர் பெருமக்களைப் பெற்றிருக்கும் திரு. டி.வி. மீனாட்சிசுந்தரம் அவர்கள், திருமிகு எஸ். வைத்தியலிங்கம் பிள்ளை - திருமதி வை. கௌரி ஆகியோரின் புதல்வராவார்.

1970-ம் ஆண்டு முதல் 1998-ம் ஆண்டுவரை அகில இந்திய வானொலியில் மட்டும் 75 முறை பாடியவர் என்ற பெருமையைப் பெற்றிருப்பவர். சென்னை இராசா அண்ணாமலை மன்றம், தமிழிசைச் சங்கத்திலும் 12 முறை பாடி புகழ் பெற்றுள்ளார்.

தமிழகம் முழுவதிலும், திருக்கோயில்களிலும், தனி அரங்கங்களிலும் தனியாகப் பாடியும், பல சமயங்களில் சேர்ந்திசை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு, பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெரியோரின் பாராட்டுகளையும் பெற்றுள்ளார். பல தேவாரக் கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டு தனது திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.

தஞ்சை மாவட்டம், திருக்கடலூர், ஸ்ரீ பிச்சைக் கட்டளை எஸ்டேட் தேவாரப் பாடசாலையில் முறையாக தேவாரப் பாடல் பயிற்சி பெற்ற திரு. டி.வி. மீனாட்சிசுந்தரம் அவர்கள், 1968-ம் ஆண்டு முதல் 1971-ம் ஆண்டு வரை சிக்கல் சிங்காரவேலன் ஆலயத்தில் தேவார-திருப்புகழ் ஆசிரியராகப் பணி புரிந்தார். அதன் பிறகு 1972 முதல் இன்றுவரை பழனி திருக்கோயிலில் தேவார ஆசிரியராகவும், ஓதுவாராகவும் பணியாற்றி வருகிறார்.

இப்படி இசைப் பணியுடன், இறைப் பணியையும் இணைத்து தமிழகமெங்கும் இசை நிகழ்ச்சிகள் நடத்திவரும் திரு.டி.வி. மீனாட்சிசுந்தரம் அவர்களின் இசைத் தொண்டினைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்

பண்பாட்டுக் கலை பரப்புநர்

திரு.வி.கே.டி. பாலன்

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் திருமிகு. வீரசங்கிலி கன்னையா-திருமதி. இசக்கியம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்த திரு. வி.கே.டி. பாலன் அவர்கள், உலக நாடுகள் பலவற்றிலும் தமிழிசை ஒலிக்க - தமிழ் மணம் பரவ - காரணகர்த்தாவாக இருப்பவர்களில் ஒருவராவார்.

தமிழிசையின் அடி நாதமாகிய நாட்டுப்புறப் பாடல்களை, தமிழகத் தலை நகரில் மேடையேற்றி அதனை ஒளிப்பேழையில் பதிவு செய்து உலகெங்கும் கேட்கவும், பார்க்கவும் செய்தவர்.

கடந்த பத்தாண்டுகளில் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ்க் கலைஞர்களை உள்ளடக்கிய நூற்றுக் கணக்கான கலைக் குழுக்களை, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, ஹாங்காங், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, மொரீசியஸ், செசல்ஸ், துபாய், பஹ்ரெய்ன், அபுதாபி, மஸ்கட், குவைத், தென் ஆப்பிரிக்கா, டென்மார்க், நெதர்லாந்து, லக்ஸம்பர்க், பெல்ஜியம், இத்தாலி, அமெரிக்கா, கனடா ஆகிய இருபத்தைந்துக்கும் மேற்பட்ட உலக நாடுகளில், கலை நிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு செய்தவர், திரு. வி.கே.டி. பாலன் அவர்கள்.

உலக அளவில் முதன் முறையாக தமிழில் கிரிக்கெட் வர்ணனையை உலகக் கோப்பை போட்டி ஆட்டங்களை - தமிழில் - லண்டனில் இருந்து 45 நாட்கள் தொடர்ந்து நேரடியாக ஒலிபரப்ப அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, உலகெலாம் தமிழ் ஒலிக்க வழி செய்து வெற்றி கண்டவர்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற கவிப்பேரரசின் புத்தக வெளியீட்டு விழாவில், டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பேருரையை முதன் முறையாக ஒரே நேரத்தில், கனடா கீதவாணி, லண்டன் சாவதேச ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனம், ஆஸ்திரேலியா இன்பத் தமிழ் ஒலி ஆகிய வானொலிகள் வாயிலாக உலகமெங்கும் வெற்றிகரமாக ஒலிபரப்பி பெரும் சாதனை புரிந்துள்ளார்.

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்''

- எனும் பாரதியின் கனவை நினைவாக்கிவரும் திரு. வி.கே.டி. பாலன் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், பண்பாட்டுக் கலை பரப்புநருக்கான 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்

பண்பாட்டுக் கலை பரப்புநர்

திரு. ஆர். இராமச்சந்திரன்

1924-ம் ஆண்டு சென்னையில் பிறந்த திரு. ஆர். இராமச்சந்திரன் அவர்கள், சென்னை மாநிலக் கல்லூரியிலும், லயோலா கல்லூரியிலும் அரசியல் மற்றும் பொருளாதாரத் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

அவர் தனது 25-வது வயது முதல் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். அதன் பிறகு 1960-ம் ஆண்டு முதல் 'ஹிந்து' நாளேட்டில் 27 ஆண்டுகள் முதன்மை உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

இவரது குடும்பத்தார் அனைவரும் இசைத் துறையில் நாட்டம் கொண்டவர்கள். மயிலை ரசிக ரஞ்சனி சபாவின் செயற்குழுவில் பங்கு பெற்று இசைத் துறைக்கு அரும் பணியாற்றிய திரு. ஆர். இராமச்சந்திரன் அவர்கள், 1990 முதல், அம்சத்வனி என்ற அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டு இசைக் கலையைப் பரப்பி வருகிறார். கலை நிகழ்ச்சிகளை அமைப்பதிலும், கலைஞர்களை ஊக்குவிப்பதிலும் திரு. ஆர். இராமச்சந்திரன் அவர்கள் தனிச் சிறப்பினைப் பெற்றுள்ளார் என்று பல இசை மேதைகளால் பாராட்டப்பட்டு வருகிறார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலே, திருவாவடுதுரை ராஜரத்தினம் பிள்ளை அவர்களின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியினை பொலிவுமிக்க கலை விழாவாக நடத்தி பெருமை பெற்றவர்.

இசைப்பணியில் தீவிரமாக ஈடுபட்டு, பண்பாட்டுக் கலை பரப்புநராகப் பணியாற்றிவரும் திரு. ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

பரத நாட்டிய ஆசிரியை

திருமதி. சரோஜா வைத்தியநாதன்

திருமிகு. தர்மராஜன்-திருமதி. கனகம் தம்பதியருக்கு 1937-ம் ஆண்டு புதல்வியாகப் பிறந்த திருமதி. சரோஜா வைத்தியநாதன் அவர்கள், சிறந்த நாட்டியக் கலைஞராக - கலைக்கூடம் ஒன்றினை நிறுவி பல மாணவிகளுக்கு பயிற்சி தரும் நாட்டிய ஆசிரியராக - புதுடில்லியிலே புகழ் பெற்று விளங்குகிறார். இந்தியா மட்டுமின்றி, உலக நாடுகள் பலவற்றுக்கும் தன் குழுவினருடன் சென்று எண்ணற்ற நாட்டிய நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார்.

சென்னையில் திருமதி. லலிதாவின் சரஸ்வதி கான நிலையத்தில் பயின்று தேர்ந்த அவர், பாரதியாரின் பாஞ்சாலி சபதம், ஐயப்பன் சரித்திரம், காஞ்சி காமகோடியாரின் வரலாறு, முருகன் திருவிளையாடல், ஆதிசங்கரர், ருத்ரம் போன்ற நாட்டிய நாடகங்களை முறைப்படி ஆய்வு செய்து, மேடையேற்றியுள்ளார்.

1974-ல் புதுடில்லியில் கணேச நாட்டியாலயா என்ற பெயரில் ஒரு நாட்டியப் பள்ளியைத் துவங்கி, 1988-ம் ஆண்டு அந்தப் பள்ளிக்காக கட்டிடம் ஒன்றைக் கட்டி, அதனை முன்னாள் குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அவர்களைக் கொண்டு திறந்து வைக்கச் செய்த திருமதி. சரோஜா வைத்தியநாதன் அவர்கள், இதுவரை நூற்றுக் கணக்கான மாணவிகளின் நடன அரங்கேற்றத்தினையும் நடத்தியுள்ளார்.

பரதம் பற்றிய மிக அரிதான நூல்கள் பலவற்றையும் திருமதி. சரோஜா வைத்தியநாதன் அவர்கள் எழுதியுள்ளார். அவர் எழுதியுள்ள 'தி சயின்ஸ் ஆப் பரதநாட்டியம்' என்ற நூலினை முன்னாள் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அம்மையார் வெளியிட்டுள்ளார்கள்.

'நாட்டிய கலா பூஷணி', 'நாட்டிய திலகம்', 'லலித கலா ரத்னம்' போன்ற பட்டங்களைப் பெற்றுள்ள திருமதி. சரோஜா வைத்தியநாதனின் கலைச் சேவையைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

பரதநாட்டியக் கலைஞர்

செல்வி. ஹேமா ஸ்ரீபால்

திருமிகு. சு. ஸ்ரீபால் - திருமதி. கமலி ஸ்ரீபால் தம்பதியருக்கு 1979-ல் புதல்வியாகப் பிறந்த செல்வி. ஹேமா ஸ்ரீபால், தனது இருபதாவது வயதிற்குள்ளேயே பரத நாட்டியத் துறையில் எண்ணற்ற சாதனைகளைப் புரிந்துள்ளார்.

கலைமாமணி திருமதி. கே.ஜே. சரசாவின் மாணவியான அவர், 1989-ல் தனது பத்தாவது வயதிலேயே அரங்கேற்றத்தை நிகழ்த்தி, ஏராளமான நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார்.

நாரத கான சபா, பார்த்தசாரதி சபா, கிருஷ்ண கான சபா, சங்கராபரணம் டிரஸ்ட், கே.ஆர். சபா, கபாலி பைன் ஆர்ட்ஸ், பாரத் கலாச்சார், தமிழிசைச் சங்கம், திருப்பதி வெங்கடேசுவரா பல்கலைக் கழகம், மியூசிக் அகாடெமி, தென்னகப் பண்பாட்டு மையம் - போன்ற அமைப்புகளில் நடனமாடிய செல்வி ஹேமா ஸ்ரீபால் அவர்கள், தஞ்சையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலும் நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார். மன்னார்குடி ராஜகோபால்சாமி கோவிலிலும், ஸ்ரீரங்கம் ரங்கநாதசாமி கோயிலிலும் நடனமாடி பாராட்டைப் பெற்றுள்ளார்.

அமெரிக்கா, இங்கிலாந்து, மலேஷியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளிலும் நடன நிகழ்ச்சிகள் நடத்திப் புகழ் பெற்றுள்ளார்.

சங்கராபரணம் டிரஸ்ட்டினரால் 'நாட்டிய கிஷோரி' என்ற பட்டத்தினையும், 'சுவர்ண கலசம்' என்ற விருதினையும் பெற்றுள்ள செல்வி ஹேமா ஸ்ரீபால் அவர்களின் கலைப் பணியைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

பரத நாட்டியக் கலைஞர்

திருமதி. பார்வதி ரவி கண்டசாலா

இசைமேதை அமரர் பத்மஸ்ரீ திரு. கண்டசாலா வெங்கடேசுவர ராவின் மருமகளான திருமதி. பார்வதி ரவி கண்டசாலா அவர்களின் பெற்றோர் திருமிகு. பி.எம். நாராயணசாமி - திருமதி. கமலா தம்பதியர் ஆவர்.

தனது 11-வது வயதிலேயே கலைமாமணி திருமதி. கிருஷ்ணகுமாரி நரேந்திரனிடம் நடனம் கற்கத் துவங்கிய திருமதி. பார்வதி ரவி கண்டசாலா அவர்கள், 17-வது வயதில் தனது அரங்கேற்றத்தினை நடத்தி, தற்போதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட நடன நிகழ்ச்சிகளை இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் நிகழ்த்தியுள்ளார்.

நூற்றுக்கும் அதிகமான மாணவியருக்கு நடனம் கற்றுத்தரும் அவர், சென்னையில் கிருஷ்ண கான சபா, நாரத கான சபா, சங்கீத வித்வத் சபா, கார்த்திக் கலையரங்கம், ராஜா அண்ணாமலை மன்றம் போன்ற பல அமைப்புகளில் நடன நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார்.

இராமலிங்க அடிகளாரின் உள்ளம் கசிந்துருகும் இனிய தமிழ்ப் பாடல்களை ''அருளாடல்'' என்ற பெயரிலே திரு. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் இசையமைப்பிலே அரங்கேற்றிப் பெருமை பெற்றுள்ளார்.

இசை மேதை ஜேசுதாஸ் அவர்கள் பாடிய பாடல்களுடன், ''உச்சித் திலகம்'' என்ற பெயரிலே அபிராமி அந்தாதிப் பாடல்களையும் நாட்டிய நாடகமாக்கி புகழ் பெற்றுள்ளார்.

இத்தகைய நாட்டிய நாடகங்கள் பலவற்றை நடத்திவரும் திருமதி. பார்வதி ரவி கண்டசாலா அவர்கள், 'கலாபிரியதர்ஷினி' என்ற நடனப் பள்ளியை நிறுவி, அப்பள்ளியின் பெயரால் ஒரு 'டிரஸ்ட்'டை ஏற்படுத்தி, அதன் காப்பாளராக நீதியரசர் திரு. கே.எஸ். பக்தவச்சலம் அவர்களையும் நியமித்துள்ளார். இப்படிப் பலவிதங்களில் நடனக் கலைக்குச் சேவை செய்து வரும் திருமதி. பார்வதி ரவி கண்டசாலா அவர்களுக்கு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

பரத நாட்டியக் கலைஞர்

திருமதி. பத்மினி துரைராஜன்

பாரம்பரியம் மிக்க கலைக் குடும்பத்தில் பிறந்த திருமதி. பத்மினி துரைராஜன், தனது இளம் வயதில் பந்தநல்லூர் அமரர் திரு. சொக்கலிங்கம் பிள்ளை அவர்களிடமும், அவரது புதல்வர் திரு. சுப்பராய பிள்ளை அவர்களிடமும், பிறகு 'கலாஷேத்ரா'வைச் சேர்ந்த திருமதி. மைதிலி ராகவன் அவர்களிடமும் தனது நடனக் கலையைப் பயின்றார். மேலும், திரு. தனஞ்செயன், திருமதி. சாந்தா தனஞ்செயன் அவர்களின் மேற்பார்வையில் பரதக் கலையில் மெருகூட்டப் பெற்றார்.

1988-ம் ஆண்டு சோவியத் ரஷ்யாவின் 'இந்தியக் கலைவிழா'விலும், 1992-ம் ஆண்டு ஹாங்காங், பேங்காக், சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளிலும், 1996-ம் ஆண்டு 'இந்திய பண்பாட்டு மாற்று உறவு முறை' குழுவின் பிரதான கலைஞராக தேர்வு செய்யப்பட்டு, மாலத்தீவில் இந்தியத் தூதரகத்தில் குடியரசு தின விழாவிலும், பிரான்சில் இந்திய சுற்றுலாத் துறையின் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு பலரும் பாராட்டும் அளவில் நடனமாடியுள்ளார்.

தொலைக்காட்சி நிலையத்தினரால் பரதக் கலையின் முதனிலைக் கலைஞராகத் தேர்வு செய்யப்பட்ட இவர், 1993-ம் ஆண்டு, இந்திய அரசின் பண்பாட்டுத் துறையின் மூலம் ''முதுநிலை ஆய்வுத் தகை நிலை'' அளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மேலும், தமிழக அரசின் பண்பாட்டுத் துறையின் மூலம் சீனாவில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். 1998-ம் ஆண்டு இந்திய சுதந்திர தினப் பொன்விழா நிறைவு விழாவில் 'பாரத சக்தி' எனும் நிகழ்ச்சியினையும் மேடையேற்றியுள்ளார்.

இவை மட்டுமின்றி, இளங்கோ அடிகளின் 'சிலப்பதிகார'த்தின் கதாபாத்திரமாகிய மாதவியை தனது முதுநிலை ஆராய்ச்சிக்காக (Ph.D.) 'ஆடலரசி மாதவி' எனும் தலைப்பில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சியைத் தொடர்ந்து வரும் திருமதி. பத்மினி துரைராஜன் அவர்களின் கலைச்சேவையைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

நடனக் கலை பரப்புநர்

டாக்டர். மஞ்சுளா லுஸ்டி நரசிம்மன்

சென்னையிலே திருமிகு நரசிம்மன் - திருமதி. கமலா தம்பதியருக்குப் புதல்வியாகப் பிறந்த திருமதி. மஞ்சுளா, சுவிட்சர்லாந்து நாட்டிலே, ஜெனிவா நகரத்திலே 'சிலம்பம்' என்ற பெயரிலே ஒரு நாட்டியப் பள்ளியைத் துவங்கி பல மாணவிகளுக்கு பயிற்சி அளித்து வருவது பெரிய சாதனையாகும்.

அவர் ஜெனிவாவில் உள்ள 'பயோ டெக்னாலஜி' நிறுவனத்தில் அறிவியல் துறை இயக்குநராகப் பணியில் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருமதி. மஞ்சுளா தனது நான்காவது வயதிலேயே நடனப் பயிற்சியைத் தொடங்கியவர். திருமதி. சொர்ணா சரஸ்வதி, திரு. குத்தாலம் கணேசப் பிள்ளை ஆகியோரிடம் தனது பயிற்சியை பெற்ற அவரது அரங்கேற்றம் 1976-ம் ஆண்டு சென்னை கலாமந்திர் அறக்கட்டளையில் நடைபெற்றது.

22 ஆண்டுகளாக நூற்றுக் கணக்கான நடன் நிகழ்ச்சிகளில் பங்கு பெற்ற அவர், நடனம் பற்றிய உரை நிகழ்வுகளும், பயிற்சி வகுப்புகளும் நடத்தியுள்ளார்.

'நாட்டியக் கலைச் செல்வி', 'யுவகலா பாரதி', 'நடன மாமணி' போன்ற பட்டங்களைப் பெற்ற திருமதி. மஞ்சுளா தனது நடன நிகழ்ச்சிகள் மூலம் கிடைக்கும் வருமானம் அனைத்தையும் ஏழை மக்களின் சேவைகளுக்காகவே செலவிடுகிறார்.

சுவிட்சர்லாந்திலே நடனப் பள்ளியை நடத்திக் கொண்டு, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, செக்கோஸ்லோவேக்யா, யுகோஸ்லாவியா, பஹ்ரைன் போன்ற நாடுகளிலும் தனது நடன நிகழ்ச்சிகளை நடத்திவரும் திருமதி. மஞ்சுளா லுஸ்டி நரசிம்மனின் கலைச் சேவையைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு ''கலைமாமணி'' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்
பரத நாட்டிய மிருதங்கக் கலைஞர்

தஞ்சை திரு. அ. நடராசன்

நாட்டிய விற்பன்னர் கலைமாமணி தஞ்சை திரு. டி.எம். அருணாசலம் பிள்ளை - நடன ஆசிரியை திருமதி. ஜெயலட்சுமி தம்பதியரின் புதல்வராக 1960-ம் ஆண்டில் பிறந்த திரு. அ. நடராஜன் அவர்கள், தான் இசைத் துறையிலே 14-வது தலைமுறையைச் சார்ந்தவர் என்ற பெருமைக்குச் சொந்தக்காரர்.

அவர் தனது இளம் வயது முதலே கலைமாமணி தஞ்சை திரு. டி.ஆர். சீனிவாசன் அவர்களிடம் மிருதங்கம் கற்கத் துவங்கி, பிறகு தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியிலே பயின்று, 'வாத்தியக் கலைமணி' பட்டயம் பெற்ற சிறப்புக்குரியவராவார்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, பிரான்ஸ், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளில் நடைபெற்ற நடன நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மிருதங்கம் வாசித்திருக்கிறார். இன்று தமிழகத்தில் உள்ள அனைத்து முன்னணி நடனக் கலைஞர்களுக்கும் மிருதங்கம் வாசித்துக்கொண்டிருப்பது அவரது பெருமைகளில் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய புகழுக்குரிய தஞ்சை திரு. அ. நடராஜன் அவர்கள், கடந்த 11 ஆண்டுகளாக சென்னை தமிழ்நாடு இசைக் கல்லூரியில் மிருதங்க விரிவுரையாளராகவும் பணிபுரிந்து வருகிறார்.

அவரது கலைச் சேவையினைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்

நாடக நடிகர்

திரு. டி.கே. மாரியப்பன்

தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு தாலுக்கா, தென்னமநாடு என்ற கிராமத்தில், திரு. குமாரசாமி - திருமதி. தங்கம்மாள் தம்பதியர்க்கு 1928-ம் ஆண்டு மகனாகப் பிறந்த திரு. டி.கே. மாரியப்பன் அவர்கள், ஆரம்பப் பள்ளிப் படிப்பை முடித்த உடனேயே நாடகத் துறையில் ஏற்பட்ட ஆர்வம் காரணமாக, ராஜமாணிக்கம் அவர்களின் நாடகக் குழுவில் சேர்ந்து தொடர்ந்து பல ஆண்டுகள், பல நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றார்.

பிறகு பல நாடகக் குழுக்களில் பணியாற்றிய திரு. டி.கே. மாரியப்பன் அவர்கள், நடிகர் திரு. கண்ணப்பா அவர்களின் 'கவிச் சக்கரவர்த்தி கம்பர்' என்ற நாடகத்தில் ஒட்டக்கூத்தர் வேடமணிந்து, சிறப்பாக நடித்து பெரும் பாராட்டைப் பெற்றார்.

முன்னாள் முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர்., நடிகர் திலகம் சிவாஜி கணேசன், ஔவை திரு. டி.கே. சண்முகம், திரு. ஏ.பி. நாகராஜன், திரு. எஸ்.எஸ். இராஜேந்திரன் ஆகியோரின் பாராட்டைப் பெற்ற திரு. டி.கே. மாரியப்பன் அவர்கள், ஏராளமான தொலைக்காட்சித் தொடர்களிலும், வானொலி நிலைய நாடகங்களிலும் நடித்துப் புகழ் பெற்றுள்ளார்.

காலம் சென்ற திரு. எஸ்.டி. சுந்தரம் அவர்களுடன் இணைந்து பல்வேறு நாடகங்களைத் தயாரித்த திரு. டி.கே. மாரியப்பன் அவர்கள், நாடகத் துறைக்கு ஆற்றியுள்ள கலைத் தொண்டினைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

நாடக நடிகை

திருமதி. 'பசி' சத்யா

மதுரை மாநகரில் திரு. ஜானகிராமன் - திருமதி. இராசாமணி அம்மையார் தம்பதியருக்கு மகளாகப் பிறந்த திருமதி. 'பசி' சத்யா, சிறு வயது முதலே பற்பல நாடகங்களில் நடித்திருந்த போதிலும் 'பவளக்கொடி' நாடகத்தில் அவர்கள் ஏற்று நடித்த 'புலந்திரன்' பாத்திரம்தான் அவருக்கு மேடை அறிமுகத்தை வெகுவாகப் பெற்றுத் தந்தது.

பிறகு சென்னைக்கு வந்து திரு. சுருளிராஜன், திரு. உடையப்பா, திருமதி சந்திர காந்தா ஆகியோரின் நாடகக் குழுக்களில் நடித்த அவர், விரைவிலேயே 'நகைச்சுவை நடிகை' என்ற பெயரினைப் பெற்றார்.

அதைத் தொடர்ந்து திரைப்பட வாய்ப்புகளும் அவரைத் தேடி வந்தன. இயக்குநர் துரை இயக்கிய, தேசிய விருதினைப் பெற்ற 'பசி' என்ற திரைப்படத்தில் அவர் ஏற்றிருந்த வேடம் அனைவரின் பாராட்டுகளைப் பெற்ற தோடல்லாமல், வெறும் சத்யாவாக இருந்த அவருக்கு 'பசி' சத்யா என்ற பெயரையும் பெற்றுத் தந்தது.

முன்னணி இயக்குநர்களான திரு. கே. பாலச்சந்தர், திரு. பாலுமகேந்திரா, திரு. பாக்யராஜ், திரு. எஸ்.பி. முத்துராமன், திரு. பாரதிராஜா, திரு. எஸ்.ஏ.சந்திரசேகர், திரு. சங்கீதம் சீனிவாசராவ் போன்றவர்களின் திரைப் படங்களில் நடித்ததின் வாயிலாக திரையுலகிலும் தனக்கென ஓரிடத்தை தக்க வைத்துக் கொள்ள முடிந்தது.

நாடக மேடை, திரைப்படம் என்பதுடன் நில்லாமல், ஏ.வி.எம். நிறுவனம் தயாரித்த 'ஒரு பெண்ணின் கதை' என்ற தொலைக்காட்சித் தொடரில் நடித்ததின் மூலம் சின்னத்திரை ரசிகர்களின் பாராட்டையும் பெற்றார்.

இன்றும் பல மேடை நாடகங்களில் நடித்து வரும் திருமதி. 'பசி' சத்யா அவர்களின் கலைச் சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்

நாடக ஆசிரியர்

திரு.எஸ். கஜேந்திரகுமார்

திருமிகு. எம்.டி. செல்வராஜ் - திருமதி. புனிதவதி தம்பதியருக்குப் புதல்வராகப் பிறந்த திரு. எஸ். கஜேந்திரகுமார் எழுதிய முதல் நாடகமான 'தெய்வ ஆராதனை' 1970-ம் ஆண்டு மேடை ஏறியது. அதன் பிறகு பிரபல திரைப்பட நடிக நடிகையர் பலர் நாடகம் நடத்துவதற்கும், நடிப்பதற்கும் இவரது எழுத்து பலமுறை பயன்பட்டிருக்கிறது.

திரு. ஏ.வி.எம். ராஜன் - திருமதி. புஷ்பலதா இருவரும் இணைந்து நடித்த 'கரும்பு', 'கதம்ப மாளிகை', திரு. எஸ்.ஏ. அசோகன் அவர்கள் நடித்த '50 சிரிக்கிறது-20 அழுகிறது', திரு. விஜயகுமார்-திருமதி. மஞ்சுளா இருவரும் இணைந்து நடித்த 'சிவசக்தி', திரு. காத்தாடி ராமமூர்த்தி குழுவினர் நடித்த 'படி தாண்டிய பதி', 'பிள்ளையார் சுழி', 'நல்ல சகுனம்', திரு. செந்தாமரை குழுவினர் நடித்த 'காற்றுக்கும் வேர்க்கும்', 'புகையே இல்லாத நெருப்பு' என்று தொடர்ந்து திரு. கஜேந்திரகுமார் எழுதிய 30 நாடகங்கள், 3000 முறைக்கு மேல் மேடை ஏறி அவருக்கு முதல் தர நாடக எழுத்தாளர் என்ற சிறப்பைத் தந்துள்ளது.

நாடகத் துறையின் மூலம் திரைப்படத் துறையிலும் புகுந்த அவர், 'எங்க ஊரு பாட்டுக்காரன்' 'பெண் புத்தி முன் புத்தி', 'வீட்டுக்காரி' போன்ற திரைப் படங்களுக்கும் கதை வசனம் எழுதியுள்ளார்.

1988-ம் ஆண்டில் மைலாப்பூர் அகாடமியின் 'சிறந்த நாடக ஆசிரியர்' விருதினைப் பெற்ற திரு. எஸ். கஜேந்திரகுமார் அவர்கள், 'கலாரசனா', சிவகாசி பைன் ஆர்ட்ஸ், தமிழ்நாடு சினிமா கலை மன்றம், பெரம்பூர் ஆர்ட்ஸ் அகாடமி, பொள்ளாச்சி தமிழ்ச் சங்கம், ஈரோடு கலாலயம், பாரதி கல்சுரல் அகாடமி, பிரியா கல்சுரல் அகாடமி போன்ற பல சபாக்களின் வாயிலாக பல பரிசுகளைப் பெற்றுள்ளார். அவரது நாடகத் தொண்டினைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

தொழில் முறை இல்லாத நாடக நடிகர்

திரு. டி.எஸ். சிவப்பிரகாசம்

தஞ்சை மாவட்டம், திருக்காட்டுப் பள்ளியில் திருமிகு. டி.எஸ். சிவஞானம் பிள்ளை - திருமதி. மீனாம்பாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்த திரு. டி.எஸ். சிவப்பிரகாசம் அவர்களுக்கு நாடகத்தில் நடிக்க வேண்டுமென்ற ஆர்வத்தைத் தோற்றுவித்தது, அவரது தந்தையார் புரிந்து வந்த பணிதான். திருக்காட்டுப் பள்ளி பஞ்சாயத்து போர்டில் பணியாற்றிய அவரது தந்தையாரிடம் நாடகக் குழுவினர், நாடகம் நடத்துவதற்கு அனுமதி கேட்டு வரும்போதெல்லாம், திரு. சிவப்பிரகாசம் அவர்களும் நாடகம் பார்க்கச் சென்றுவிடுவார்.

திரு. டி.ஆர். மகாலிங்கம், கலைவாணர் திரு. என்.எஸ். கிருஷ்ணன், நடிப்பிசைப் புலவர் திரு. கே.ஆர். ராமசாமி ஆகியோரின் நாடகங்களைப் பலமுறை பார்த்து அவைகளினால் ஈர்க்கப்பட்டு, சென்னைக்கு வந்து திரு. டி.கே. சண்முகம் அவர்களின் நாடகக் குழுவில் சேர்ந்தார். பின்னர், திருமதி எம்.எஸ். திரெளபதி அவர்களின் நாடகக் குழுவில் நடித்து சிறந்த நாடக நடிகராகிவிட்டார்.

அந்த அனுபவத்தின் பலனாக அவர், தானே நாடகம் நடத்த ஆரம்பித்தார். நாடகங்களை எழுதுதல், நடித்தல், இசையமைத்தல், பாடுதல், ஒப்பனை செய்தல் - போன்ற நாடகம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளையும் தானே ஏற்று ஏராளமான நாடகங்களை நடத்தியுள்ள திரு. டி.எஸ். சிவப்பிரகாசம் அவர்கள், நுழைவுக் கட்டணம் வசூலிக்காமலும் பல நாடகங்களை நடத்தியுள்ளார்.

ஏராளமான நாடக ரசிகர்களின் நெஞ்சங்களில் நீங்காத இடம் பெற்றுள்ள திரு. டி.எஸ். சிவப்பிரகாசம் அவர்களுக்கு 'கலைமாமணி' விருதினை தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்

திரைப்பட நடிகர்

திரு. அர்ஜுன்

'ஆக்ஷன் கிங்' என்று திரையுலகத்தினரால் அன்போடு அழைக்கப்படும் திரு. அர்ஜுன் அவர்கள், திரைப்பட நடிகர் திருமிகு. சக்தி பிரசாத் - திருமதி. லட்சுமிதேவி தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். அவர், இயக்குநர் திரு. இராம நாராயணன் அவர்களால் தமிழ்த் திரைப்பட உலகிற்கு 1984-ம் ஆண்டு 'நன்றி' படத்தின் மூலம் அறிமுகமானார்.

அதைத் தொடர்ந்து 'சங்கர்குரு', 'சேவகன்', 'ஜென்டில்மேன்', 'ஜெய்ஹிந்த்', 'கர்ணா', 'சாது', 'ஆயுத பூஜை' போன்ற நூற்றுக்கும் அதிகமான படங்களில் நடித்திருக்கும் திரு. அர்ஜுன் அவர்கள், தான் நடித்த சில படங்களை தயாரித்தும் இயக்கியும் உள்ளார்.

1994-ம் ஆண்டு 'ஜென்டில்மேன்' படத்தில் நடித்ததற்காக சிறந்த நடிகர் என்ற தமிழக அரசின் விருதினைப் பெற்றுள்ளார். மேலும் 'பிலிம்பேர்', 'ஸ்கிரீன்', 'சினிமா எக்ஸ்பிரஸ்' ஏடுகளின் விருதுகளையும் பெற்றிருக்கும் திரு. அர்ஜுன் அவர்களின் கலைத் தொண்டினைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

திரைப்பட நடிகை

செல்வி. ரம்யா கிருஷ்ணன்

பரத நாட்டிய மேடையிலிருந்து, திரைப்பட அரங்கத்திற்குள் நுழைந்த திரைப்பட நடிகைகள் பலருண்டு. அவர்களில் ஒருவர்தான் தனது மெருகடைந்த நடிப்புத் திறனால் ரசிகர்களின் நெஞ்சங்களில் என்றும் நீங்காத இடம் பெற்றுள்ள செல்வி. ரம்யா கிருஷ்ணன்.

திருமிகு. கிருஷ்ணன் - திருமதி. நித்யா தம்பதியர்க்குப் புதல்வியாகப் பிறந்த செல்வி. ரம்யா கிருஷ்ணன் அவர்கள், பள்ளிப் படிப்புடன் சேர்ந்தே நடனப் பயிற்சியும் பெற்று வந்தார். தனது 10-வது வயதில் நடன அரங்கேற்றத்தை வெற்றிகரமாக நிகழ்த்தினார்.

அதன் பிறகு தொடர்ந்து பல மேடைகளில் நடனமாடிய அவரை திரை உலகம் வரவேற்றது. 1984-ம் ஆண்டில் 'வெள்ளை மனசு' என்ற திரைப் படத்தின் மூலம் தனது திரையுலகப் பயணத்தைத் துவக்கிய செல்வி. ரம்யா கிருஷ்ணன் அவர்கள், இன்றுவரை தமிழ் மட்டுமில்லாமல் தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி என 5 மொழிகளிலும் மிகக் குறுகிய காலத்தில் 150 படங்களுக்கு மேல் நடித்து புகழ் பெற்றுள்ளார்.

சமீபத்தில் வெளிவந்துள்ள 'படையப்பா' திரைப் படத்தில் 'நீலாம்பரி' என்ற மாறுபட்ட பெண் வேடத்தில் நடித்ததன்மூலம், தான் ஒரு சிறந்த நடிகை என்ற முத்திரையையும் பதித்துவிட்டார்.

'கண்டி கூத்துலு காணு' என்ற தெலுங்குத் திரைப் படத்தில் மிகவும் சிறப்பாக நடித்தமைக்காக ஆந்திர மாநில அரசின் சிறந்த நடிகைக்கான 'நந்தி' விருதினைப் பெற்றுள்ளார்.

திரையுலகில் செல்வி. ரம்யா கிருஷ்ணனின் சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்

திரைப்பட குணச்சித்திர நடிகர்

திரு. லிவிங்ஸ்டன்

குணசித்திர நடிகராக - வில்லனாக - கதாநாயகனாக பலவித பரிணாமங்கள் எடுத்து, திரையுலகில் தனது 36 வயதிற்குள்ளேயே 45 திரைப் படங்களில் நடித்து, ஒரு வெற்றி நடிகராக பவனிவரும் திரு. லிவிங்ஸ்டன் அவர்கள், அதிகமான படங்களில் குணச்சித்திர பாத்திரத்தில்தான் தோன்றியுள்ளார்.

திரு. ஜோன்ஸ் - திருமதி. ரேச்சில் தம்பதியர்க்குப் புதல்வராகப் பிறந்த திரு. லிவிங்ஸ்டன் அவர்கள், தமிழ்நாடு அரசு திரைப்படக் கல்லூரியில் நடிப்புப் பயிற்சியில் படித்தவர் என்ற பெருமைக்குரியவர்.

முதன் முதலாக அவர் திரைப் படத்துறையிலே நுழைந்தது உதவி இயக்குநராகத்தான். இயக்குநர் திரு. கே. பாக்யராஜ் அவர்களுடன் இணைந்து 4 படங்கள் பணியாற்றிய பின், கதை வசனகர்த்தாவாக மாறினார். திரு. ஜி.எம். குமார் அவர்களுடன் சேர்ந்து ‘கன்னிராசி’, ‘காக்கிச் சட்டை’, ‘அறுவடை நாள்’ போன்ற படங்களுக்கு கதை வசனம் எழுதினார். அடுத்து லிவிங்ஸ்டனின் மூன்றாவது முகம் வில்லன் நடிகராக வெளிப்பட்டது, திரு. விஜய்காந்த், திரு. இப்ராஹிம் இராவுத்தர் தயாரித்த ‘பூந்தோட்டக் காவல்காரன்’ என்ற படத்தில் தான். பிறகு ‘சுந்தர புருஷன்’ என்ற திரைப் படத்தில் கதாநாயகனாக அறிமுகமானார்.

அவர் நடித்த ‘சொல்லாமலே’, ‘விரலுக்கேத்த வீக்கம்’ போன்ற படங்கள் மகத்தான வெற்றி அளித்ததைத் தொடர்ந்து, கதாநாயகன், வில்லன் வேடங்கள் மட்டுமின்றி குணசித்திர நடிகராகவும் பல படங்களில் நடித்து வருகிறார்.

தொய்வில்லாது தொடரும் அவரது கலைப் பணியைப் பாராட்டி தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் ‘கலைமாமணி’ விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்
திரைப்பட குணச்சித்திர நடிகை
திருமதி. எஸ். ராதாபாய்

தொடர்ந்து 50 ஆண்டு காலம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி என ஐந்து மொழிகளிலும் ஏராளமான படங்களில் குணச்சித்திரப் பாத்திரம் ஏற்று நடித்த திருமதி. எஸ். ராதாபாய் அவர்கள் பிறந்தது - வளர்ந்தது எல்லாம் ஈரான் நாட்டில்.

தமிழகத்துக்கு வந்த அவரது நடிப்புத் திறனைக் கண்டு, கலைஞர் கதை வசனம் தீட்டிய 'பூம்புகார்' படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. பின்னர் 'பூமாலை', 'தெய்வப்பிறவி', 'சித்தி', 'கை கொடுத்த தெய்வம்', 'கீதாஞ்சலி', 'ஜென்டில்மேன்', 'ஆஹா', 'வாலி' என்று சமீபத்திய படங்கள்வரை திருமதி. எஸ். ராதாபாய் அவர்கள் தொடர்ந்து கலைப்பணி புரிந்துள்ளார்.

திரு. பீம்சிங், திரு. கே.எஸ். கோபாலகிருஷ்ணன், திரு. மணிரத்னம் போன்ற இயக்குநர்களின் படங்களில் குறிப்பிடத்தக்க வேடங்களில் நடித்துப் புகழ் பெற்ற திருமதி. எஸ். ராதாபாய் நடித்த படங்களின் எண்ணிக்கை நூற்றுக்கும் அதிகமாகும். அன்று முதல் இன்றுவரை இயங்கி வரும் முன்னணி திரைப்பட நிறுவனங்கள் தயாரித்த பல படங்களிலும் நடித்த ஒரே நடிகை என்ற சிறப்பும் இவருக்கு உண்டு.

தனது மகள் திருமதி. குட்டி பத்மினி அவர்களுடன் சேர்ந்து நலிவுற்ற நாடகக் கலைஞர்களுக்கு உதவும் நோக்கத்துடன் பல நாடகங்கள் நடத்தியுள்ள திருமதி. எஸ். ராதாபாய் அவர்களுக்கு, அவரது திரையுலகப் பணியைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்

திரைப்பட நகைச்சுவை நடிகர்

திரு. ஆர். சுந்தர்ராஜன்

திரைப்பட இயக்குநராக திரையுலகில் பயணம் செய்யத் துவங்கி, இன்றைய தினம் எந்தப் பாத்திரத்தையும் ஏற்று, அதனை நகைச்சுவை பாணியில் தரும் மிகச் சிறந்த நகைச்சுவை நடிகராக எண்ணற்ற படங்களில் நடித்து வரும் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள், திருமிகு. பி.ஆர். ராமசாமி - திருமதி. அம்முலு அம்மாள் தம்பதியருக்கு 1951-ம் ஆண்டு புதல்வராகப் பிறந்தார். சிறுவயது முதலே நாடகத் துறையில் பெரிதும் ஈடுபாடு ஏற்பட்டு, அந்த ஆர்வத்தினால் கோவையில் சொந்தமாக நாடக மன்றம் ஒன்றை நிறுவி நாடகங்கள் பலவற்றை நடத்திய அவர், 1975-ம் ஆண்டு சென்னைக்குப் புறப்பட்டார்.

சென்னையில் 7 ஆண்டு கால முயற்சிக்குப் பிறகு, 'பயணங்கள் முடிவதில்லை' என்ற திரைப் படத்தை இயக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதன் பிறகு வேறு பல படங்களை இயக்கும் வாய்ப்புகள் கிடைத்த போதிலும், சிறுவயதில் நடிப்பில் ஏற்பட்ட ஆர்வம் குறையாத காரணத்தால், தான் இயக்கும் படங்கள் மட்டுமின்றி, சக இயக்குநர்களின் படங்களிலும் நடிக்கத் துவங்கினார்.

'சாமி போட்ட முடிச்சு', 'பொறந்தாலும் ஆம்பளையா பொறக்கக் கூடாது', 'அமைதிப் படை', 'சூரிய வம்சம்', 'சீதனம்', 'காலம் மாறிப் போச்சு', 'திருமதி பழனிச்சாமி', 'என் ஆசை மச்சான்' போன்ற படங்களில் நகைச்சுவை மிளிரும் பாத்திரங்களில் நடித்த திரு. ஆர். சுந்தர்ராஜன், இப்போதும் பல படங்களை இயக்கியும் அவற்றில் நடித்தும் வருகிறார்.

அவரது பண்பட்ட கலைச் சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

திரைப்பட நகைச்சுவை நடிகை

திருமதி. டி.பி. முத்துலட்சுமி

திரு. பொன்னையா - திருமதி. சண்முகத்தம்மாள் தம்பதியருக்கு மகளாகப் பிறந்த திருமதி. டி.பி. முத்துலட்சுமி தூத்துக்குடியைச் சேர்ந்தவர். சிறு வயது முதலே கல்வியிலும் கலையிலும் நாட்டம் கொண்டிருந்தார்.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் திரு. டி.ஆர். சுந்தரம் அவர்களிடம் பணியாற்றிக் கொண்டிருந்த திரு.எம். பெருமாள் அவர்கள், திருமதி. டி.பி. முத்துலட்சுமி அவர்களின் தாய் மாமன் ஆவார். அவர் திருமதி முத்துலட்சுமியை தன்னுடன் சென்னைக்கு அழைத்து வந்து, ஜெமினி அதிபர் திரு. எஸ்.எஸ். வாசன் அவர்களிடம் அறிமுகம் செய்து வைத்தார். அதன் மூலம் திருமதி டி.பி. முத்துலட்சுமி அவர்களுக்கு ஜெமினியின் தயாரிப்பான 'சந்திரலேகா' திரைப் படத்தில் நடனமாடும் வாய்ப்பு கிட்டியது.

அதன் பிறகு இயக்குநர் ஆர்.எஸ். மணி அவர்கள் இயக்கிய 'மகாபலி சக்ரவர்த்தி' என்ற திரைப் படத்தில் நடித்தார். அந்தப் படத்தில் அவரது நடிப்புத் திறனைக் கண்டு பாராட்டிய மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்தினர், அவர்கள் தயாரித்த 'பொன்முடி', 'மந்திரி குமாரி', 'மகேஸ்வரி', 'சர்வாதிகாரி', 'வளையாபதி', 'திகம்பர சாமியார்', 'சுகம் எங்கே ?' - ஆகிய படங்களில் நகைச்சுவை கலந்த பாத்திரங்களில் நடிக்க வாய்ப்பு தந்தனர். அதன் மூலம் தனது திறமையை வெளிக்காட்டிய திருமதி. டி.பி. முத்துலட்சுமி அவர்கள், சிறந்த நகைச்சுவை நடிகையாகவே பிரபலமானார்.

கலை உலகில் வெற்றிக்கொடி நாட்டிய நடிப்பு வேந்தர்களான திரு. எம்.ஜி.ஆர்., திரு. சிவாஜி கணேசன், திரு. எஸ்.எஸ். ராஜேந்திரன், திரு. ஜெமினி கணேசன் போன்றவர்களுடன் நடித்த திருமதி. டி.பி. முத்துலட்சுமி அவர்கள், தனக்கென ஒரு தனி இடத்தை தமிழ்த் திரை உலகில் உருவாக்கிக் கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கதை வசனம் எழுதிய 'பராசக்தி', 'மந்திரி குமாரி', 'மனோகரா', 'தாயில்லாப் பிள்ளை', 'திரும்பிப் பார்' போன்ற வெற்றிப் படங்களிலும் தலைச் சிறந்த நகைச்சுவை நடிகர்களுக்கு இணையாக நடித்து இருக்கிறார்.

ஏறத்தாழ 500 திரைப்படங்களுக்குமேல் நடித்துள்ள திருமதி. டி.பி. முத்துலட்சுமியின் திரையுலகப் பணியைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்

திரைப்படத் தயாரிப்பாளர்

திரு. கோவை செழியன்

திரைப்படத் தயாரிப்பாளராகவும், அரசியலில் நீண்ட கால அனுபவமும், தொடர்பும் கொண்ட திரு. கோவை செழியன் அவர்கள், திருமிகு. கே.எஸ். செல்லமுத்துக் கவுண்டர் - திருமதி. பாப்பம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாகப் பிறந்தவர்.

1960-ம் ஆண்டுமுதல் திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள அவர், முதலில் கவிஞர் கண்ணதாசனுடன் இணைந்து பல தமிழ்ப் படங்களைத் தயாரித்தார். அதன் பிறகு, 1964-ம் ஆண்டு, கே.சி. பிலிம்ஸ் என்ற பெயரில் தனியே தயாரிப்பு நிறுவனத்தைத் துவக்கி, தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மூன்று மொழிகளிலும் 40-க்கும் மேற்பட்ட படங்களைத் தயாரித்திருக்கிறார்.

மூன்று முதலமைச்சர்களை தனது படங்களில் நடிக்க வைத்த புகழுக்கு உரியவராகிறார், திரு. கோவை செழியன் அவர்கள். 'சர்க்கஸ் ராமுடு' என்ற தெலுங்குப் படத்தில் முன்னாள் ஆந்திர முதல்வர் திரு. என்.டி. ராமாராவ் அவர்களும், 'குமரிக்கோட்டம்', 'உழைக்கும் கரங்கள்' ஆகிய படங்களில் தமிழக முன்னாள் முதல்வர்கள் திரு. எம்.ஜி.ஆர்., செல்வி. ஜெயலலிதா இருவரும் நடித்திருக்கிறார்கள்.

1971-ம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுகள் சட்ட மன்ற உறுப்பினராகவும், 1977 முதல் 1982-வரை தமிழகத் திட்டக் குழுவின் தலைவராகவும் பணியாற்றிய திரு. கோவை செழியன் அவர்கள், தென் இந்திய திரைப்பட வர்த்தக சபையின் கௌரவச் செயலாளராகவும், தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவராகவும் தொண்டாற்றியுள்ளார்.

தற்போது இரண்டு படங்களை தயாரித்துவரும் திரு. கோவை செழியன் அவர்கள், திரைப்படத் துறையின் மூத்த தயாரிப்பாளர் என்ற முறையில் அவரது சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது.



கலைமாமணி விருது பெறும்

திரைப்பட இயக்குநர்

திரு. ஆர். விக்கிரமன்

திருமிகு. பாக்கிய பேரம்பரப் பிள்ளை - திருமதி. பாலாமணி அம்மாள் தம்பதியருக்கு 1963-ம் ஆண்டு புதல்வராகப் பிறந்த திரு. விக்கிரமன் அவர்கள், தனது 36 வயதிற்குள்ளேயே நிறைய விருதுகள் பெற்ற திரைப்பட இயக்குநர் என்ற பெருமையைப் பெற்றவராவார்.

அவர் இயக்கிய முதல் படமான 'புது வசந்தம்' திரைப் படமே மாநில அரசின் திரைப்பட விருதினையும் மற்றும் பல விருதுகளையும் பெற்றுள்ளது. அதன் பிறகு அவர் இயக்கியுள்ள 'பூவே உனக்காக', 'கோகுலம்', 'சூர்ய வம்சம்' ஆகிய மூன்று படங்களும் மாநில அரசின் விருதுகளைப் பெற்றுள்ளன.

இதுவரை ஒன்பது திரைப் படங்களை இயக்கியுள்ள திரு. விக்ரமன் அவர்கள், இளைய சமுதாயத்தின் பிரச்சினைகளையே தனது கதைகளின் கருவாகக் கொண்டு, அனைத்துத் தரப்பு மக்களையும் கவரத்தக்க அளவிற்கு எல்லா ரசனைகளையும் கொண்டதாக படங்களை இயக்கிய இளம் இயக்குநர் என்ற பெருமைக்குச் சொந்தக்காரராக பெயர் பெற்றுள்ளார்.

விருதுகள் பலவற்றுக்கும் சொந்தக்காரர் என்ற முறையில் அவரது திரைப்பணிக்காக, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்

சிறந்த திரைப்பட ஒளிப்பதிவாளர்

திரு. தங்கர் பச்சான்

தமிழ்நாடு திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவாளராக பயிற்சி பெற்று, 1984-ம் ஆண்டு பட்டயம் பெற்ற திரு. தங்கர் பச்சான் திருமிகு. பச்சான் - திருமதி. லட்சுமி அம்மாள் தம்பதியர்க்குப் புதல்வராக 1961-ம் ஆண்டு பிறந்தார்.

36 வயதிற்குள்ளேயே ஏராளமான விளம்பரப் படங்களுக்கும் 22 முழு நீளப் படங்களுக்கும் ஒளிப்பதிவு செய்து, அவற்றுள் 'மோகமுள்', 'காதல் கோட்டை' மற்றும் குறும் படம் ஒன்றுக்கும் தேசிய விருதினைப் பெற்றுள்ளார்.

ஏராளமான பத்திரிகைகளின் சார்பில் விருதுகளையும் பெற்றுள்ள திரு. தங்கர் பச்சான் அவர்கள், இலக்கியத் துறையிலும் ஈடுபட்டு, 1993-ம் ஆண்டு வெளியான 'வெள்ளை மாடு' என்ற தனது சிறுகதைத் தொகுப்புக்கு மூன்று இலக்கிய விருதுகளையும் பெற்றுள்ளார். 1996-ல் வெளியான அவரது 'ஒன்பது ரூபாய் நோட்டு' என்ற நாவலுக்கு தமிழக அரசின் சிறந்த நாவலுக்கான முதல் பரிசினையும், திருப்பூர் தமிழ்ச் சங்கம் வழங்கிய சிறந்த நாவலுக்கான 'அக்னி-ஆஷா' விருதினையும் பெற்றுள்ளார்.

இந்த நாவல், பெரியார் பல்கலைக் கழகத்தில் 1999-2000 ஆண்டு பாடத் திட்டத்தின்கீழ் 'பி.ஏ.' இலக்கியம் படிக்கும் மாணவர்களுக்கு ஒரு பாட நூலாக சேர்க்கப்பட்டுள்ளது இவருக்கு பெரும் சிறப்பைத் தந்துள்ளது.

தற்போதும் ஏராளமான திரைப் படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துவரும் அவரது கலைத் தொண்டினைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்
திரைப்படக் கதாசிரியர்
திரு. ஆர். செல்வராஜ்

தமிழ்த் திரைப்பட வரலாற்றில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய படங்களில் ஒன்றான 'அன்னக்கிளி' திரைப் படத்தின் மூலம் திரையுலகிற்கு அறிமுகமான திரு. ஆர். செல்வராஜ் அவர்கள், திருமிகு. எஸ்.என். ராஜமாணிக்கம் - திருமதி. மதுரவல்லி அம்மாள் தம்பதியருக்கு 1946-ம் ஆண்டு மகனாகப் பிறந்தார்.

தொடர்ந்து அவர் எழுதிய 'புதிய வார்ப்புகள்', 'கிழக்கே போகும் ரயில்', 'புதுமைப் பெண்', 'உதய கீதம்', 'கடலோரக் கவிதைகள்', 'முதல் மரியாதை', 'சின்னக் கவுண்டர்' - ஆகிய திரைப் படங்கள் அவரை முன்னணி கதாசிரியர்களின் வரிசைக்குக் கொண்டு சென்றது. தமிழ் மட்டுமல்லாது தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிப் படங்களுக்கும் அவர் கதை எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கதை எழுதுவதோடுமட்டுமின்றி, 'பொண்ணு ஊருக்குப் புதுசு', 'அகல் விளக்கு', 'நீதானா அந்தக் குயில்', 'சிவப்பு நிறத்தில் சின்னப்பூ' போன்ற எட்டு திரைப் படங்களுக்கு இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

சமீபத்தில் இயக்குநர் திரு. பாரதிராஜா அவர்களின் 'தாஜ்மஹால்', இயக்குநர் மணிரத்னம் அவர்களின் 'அலைபாயுதே' ஆகிய படங்களுக்கு எழுத்துப் பணி புரிந்துள்ள திரு. ஆர். செல்வராஜ் அவர்களின் திரையுலகச் சேவையைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்

திரைப்படப் பாடலாசிரியர்

திரு. பிறைசூடன்

'சிறை' என்ற திரைப் படத்தில் பாடலாசிரியராக மெல்லிசை மன்னர் திரு. எம்.எஸ். விசுவநாதன் அவர்களால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட திரு. பிறைசூடன் அவர்கள், தஞ்சை மாவட்டம், கொள்ளிடம் கிராமத்தில் திரு. மு. ராஜு - திருமதி. தனலட்சுமி தம்பதியருக்குப் புதல்வராக 1956-ம் ஆண்டில் பிறந்து, தனது 43-வயதுக்குள்ளேயே 300 திரைப் படங்களில் ஏறத்தாழ 1000 பாடல்களுக்குமேல் எழுதிப் புகழ் பெற்றுள்ளார்.

திரைப் படங்களில் மட்டுமல்லாது, தொலைக்காட்சித் தொடர் பாடல்கள், பக்திப் பாடல்கள், தனி இசைப் பாடல்கள் என்றும் இதுவரை 5000 பாடல்களுக்குமேல் எழுதியுள்ள திரு. பிறைசூடன் அவர்கள், உள்நாடு, வெளிநாடுகளில் நடைபெற்ற எண்ணற்ற பட்டி மன்றங்கள், வழக்காடு மன்றங்கள், கவியரங்கங்கள், ஆன்மீகச் சொற்பொழிவுக் கூட்டங்களிலும் கலந்துகொண்டு பெருமை பெற்றுள்ளார்.

1991, 1996-ம் ஆண்டுகளில் தமிழக அரசின் சிறந்த கவிஞர் விருதினைப் பெற்ற திரு. பிறைசூடன் அவர்கள், எஸ்தர் பைன் ஆர்ட்ஸ் விருது, ஆலந்தூர் பைன் ஆர்ட்ஸ் விருது, பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் விருது, தமிழ்நாடு சினிமா கலை மன்ற விருது, எம்.ஜி.ஆர். கல்சுரல் விருது, டாக்டர் அம்பேத்கார் விருது, தமிழ்நாடு திரைப்பட ரசிகர் மன்ற விருது, லயன்ஸ் கிளப் விருது, மற்றும் மெல்லிசை மன்னர் எம்.எஸ். விசுவநாதன் அவர்களால் 'கவிஞானி' விருது போன்ற எண்ணற்ற விருதினைப் பெற்றுள்ளார்.

சந்திரசேகரன் என்ற இயற் பெயர் கொண்ட திரு. பிறைசூடன் அவர்களது கலைச் சேவையைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

திரைப்படப் பின்னணிப் பாடகர்

திரு. எஸ்.என். சுரேந்தர்



திருமிகு. எஸ்.எஸ். நீலகண்டன் - திருமதி. லலிதா ஆகியோருக்கு 1953-ம் ஆண்டு புதல்வராகப் பிறந்த திரு. எஸ்.என்.சுரேந்தர் அவர்கள், தன்னுடைய 46 வயதிற்குள்ளேயே 1000 திரைப்பட பாடல்களுக்குமேல் பாடி புகழ் பெற்றுள்ளார்.

இசையமைப்பாளர் திரு. டி.கே. ராமமூர்த்தி அவர்களால் 'சாது மிரண்டால்' என்ற திரைப் படத்தில்தான் இவர் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டார். தொடர்ந்து மெல்லிசை மன்னர் எம்.எஸ். விசுவநாதன், கே.வி. மகாதேவன், இசைஞானி இளையராஜா, சங்கர் கணேஷ், தேவா போன்ற பல முன்னணி இசையமைப்பாளர்களின் இசையில் 'பாமா விஜயம்', 'தாமரை நெஞ்சம்', 'ரசிகன்', 'ஒன்ஸ்மோர்', 'பிரியமுடன்', 'என்றென்றும் காதல்' ஆகிய திரைப் படங்கள் அவர் பாடிய பாடல்கள் இடம் பெற்ற படங்களில் சில.

திரு. கங்கை அமரன் அவர்களின் இசைக் குழுவில் பங்கேற்று பல வெளி நாடுகளுக்குச் சென்று பலமுறை இசை நிகழ்ச்சிகள் நிகழ்த்தியுள்ளார்.

திரைப்பட பாடல்களுக்கு குரல் கொடுப்பது மட்டுமல்லாமல், 500 படங்களுக்குமேல் பின்னணிக் குரலும் கொடுத்து, தொடர்ந்து திரைப் படத் துறையில் ஓய்வின்றி தொண்டாற்றிவரும் திரு. எஸ்.என். சுரேந்தர் அவர்களின் கலைத் தொண்டினைப் பாராட்டி அவருக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் 'கலைமாமணி' விருதினை வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

திரைப்படப் பின்னணிப் பாடகி

திருமதி. நித்யஸ்ரீ மகாதேவன்

இசைமேதை திருமதி. டி.கே. பட்டம்மாள் அவர்களின் பெயர்த்தியான திருமதி. நித்யஸ்ரீ மகாதேவன் அவர்கள், 1973-ம் ஆண்டு திருமிகு. சிவகுமார் - திருமதி. லலிதா தம்பதியருக்குப் புதல்வியாகப் பிறந்தவர். தனது குடும்பத்தினரிடமே இசைப் பயிற்சி பெற்ற அவர், 26 - வயதிற்குள்ளேயே பல இசை நிகழ்ச்சிகள் நடத்தியும், திரைப்பட உலகில் தலைச் சிறந்த பின்னணி பாடகியரில் ஒருவராகவும் புகழ் பெற்றுள்ளார்.

சென்னை எஸ்.ஐ.இ.டி. கல்லூரியில் பி.காம் பட்டம் பெற்ற திருமதி நித்யஸ்ரீ மகாதேவன், பள்ளி - கல்லூரி பாடல் போட்டிகளில் ஏராளமான பரிசுகளைப் பெற்றுள்ளார். சென்னை தமிழ் இசைச் சங்கம், கிருஷ்ணகான சபா - ஆகியவை நடத்திய போட்டிகளில் பல பரிசுகளைப் பெற்ற அவர், பாபநாசம் சிவன் அவர்களின் 'தம்புரா' விருதினையும், தேசிய அளவில் அகில இந்திய வானொலி நிலையம் நடத்திய இசைப் போட்டியில் முதல் பரிசினையும், சங்கீத வித்வத் சபை நடத்திய இசைப் போட்டியில் 1992, 1993 மற்றும் 1996 முதல் 1998 ஆண்டுவரை சிறந்த பாடகிக்கான விருதினையும் பெற்றுள்ளார். இவை மட்டுமல்லாமல், பல்வேறு அமைப்புகள் நடத்திய இசைப் போட்டிகளிலும் கலந்து கொண்டு ஏராளமான பரிசுகளையும் வென்றுள்ளார்.

'யுவகலா பாரதி', 'இன்னிசை மாமணி' போன்ற விருதுகளைப் பெற்ற திருமதி. நித்யஸ்ரீ மகாதேவன் அவர்கள், அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஐரோப்பா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளி நாடுகளுக்கும் சென்று நூற்றுக்கும் மேற்பட்ட இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

திருமதி. நித்யஸ்ரீ மகாதேவன் அவர்களின் இசைத் தொண்டினைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு ''கலைமாமணி'' விருது வழங்கிச் சி.றப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

திரைப்பட இசையமைப்பாளர்

திரு. எஸ்.ஏ. ராஜ்குமார்

திரு. எஸ்.ஏ. செல்வராஜன் - திருமதி. அவ்வா அம்மாள் தம்பதியருக்கு 1964-ம் ஆண்டு புதல்வராகப் பிறந்த திரு. எஸ்.ஏ. ராஜ்குமார் அவர்கள், திரைப்பட இயக்குநர்கள் ராபர்ட் - ராஜசேகரன் அவர்களால் 'சின்னப்பூவே மெல்லப்பேசு' என்ற திரைப் படத்திற்கு இசையமைப்பாளராக அறிமுகப்படுத்தப்பட்டார். முதல் படமே வெள்ளி விழா படமாக வெற்றியை ஈட்டித் தரவே, திரு. எஸ்.ஏ. ராஜ்குமார் அவர்கள் தொடர்ந்து பல படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கதை வசனம் எழுதி, திரு. இராம. நாராயணன் இயக்கிய 'வீரன் வேலுத்தம்பி', 'மக்கள் ஆணையிட்டால்' ஆகிய படங்களுக்கு இசையமைத்ததைப் பெருமையாகக் கருதுகிறார்.

'புது வசந்தம்' படத்தின் மூலம் 'பிலிம்பேர்' பத்திரிகையின் சிறந்த இசையமைப்பாளர் விருதினைப் பெற்ற திரு. எஸ்.ஏ. ராஜ்குமார் அவர்கள், தொடர்ந்து 'மனசுக்குள் மத்தாப்பு', 'ரயிலுக்கு நேரமாச்சு', 'பூவே உனக்காக' ஆகிய வெற்றிப் படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

1997-ம் ஆண்டு வெளிவந்த 'சூரிய வம்சம்' திரைப் படம் தமிழக அரசின் சிறந்த இசையமைப்பாளர் விருதினை அவருக்குப் பெற்றுத் தந்தது.

ஏராளமான தமிழ்த் திரைப்படங்களுக்கு இசையமைத்த திரு. எஸ்.ஏ. ராஜ்குமார் அவர்கள், தெலுங்குத் திரையுலகிலும் புகழ்பெற்ற இசையமைப்பாளராக பவனி வந்து கொண்டிருக்கிறார்.

திரு. எஸ்.ஏ. ராஜ்குமாரின் திரை இசைத் தொண்டினைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ''கலைமாமணி'' விருதினை வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்

திரைப்பட ஒப்பனைக் கலைஞர்

திரு. இரா. சுந்தரமூர்த்தி

திருமிகு. ஏ.வி. இராமசந்திரன் - திருமதி. பேபி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்த திரு. இரா. சுந்தரமூர்த்தி அவர்கள், தனது தந்தையாரையே குருவாகக் கொண்டு, அவரிடம் ஒப்பனைக் கலையைக் கற்று, இன்று சிறந்த ஒப்பனையாளர்களில் ஒருவராகத் திகழ்கிறார்.

கடந்த 32 ஆண்டுகளாக இத்துறையில் பணிபுரிந்துவரும் திரு. இரா. சுந்தரமூர்த்தி அவர்கள், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், ரகுவரன், அரவிந்தசாமி ஆகியோருக்குத் தொடர்ந்து ஒப்பனை செய்து வருகிறார்.

முன்னணி இயக்குநர்கள் சிலரின் சொந்தப் பட நிறுவனங்களுக்கும் அவரே ஒப்பனையாளராகப் பணியாற்றி வருகிறார். அவற்றுள் திரு. கே. பாலச்சந்தர் அவர்களின் கவிதாலயா, திரு. பாரதிராஜா அவர்களின் மனோஜ் கிரியேஷன்ஸ், திரு. மணிரத்னம் அவர்களின் மதராஸ் டாக்கீஸ், திரு. பஞ்சு அருணாசலம் அவர்களின் பி.ஏ. ஆர்ட் புரொடக்ஷன்ஸ் ஆகிய நிறுவனங்கள் முக்கியமானவைகளாகும். மற்றும் இயக்குநர்கள் திரு. கே.எஸ். ரவிகுமார், திரு. ராஜீவ் மேனன், திரு. சுரேஷ் கிருஷ்ணா, திரு. வசந்த், திரு. செல்வா, திரு. செல்வ பாரதி, திரு. சி. சுந்தர் ஆகியோர் இயக்கும் திரைப்படங்களுக்கும் ஒப்பனையாளராகப் பணியாற்றி வருகிறார்.

இதுவரை ஏறத்தாழ 400 படங்களுக்குமேல் பணியாற்றியுள்ள திரு. இரா. சுந்தரமூர்த்தி அவர்களின் திரையுலகச் சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு ''கலைமாமணி'' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

இசை நாடக நடிகர்

திரு. கே.ஏ. சொக்கலிங்க பாகவதர்



1909-ம் ,ஆண்டு திரு. குடந்தை ஆறுமுகம் - திருமதி. கருந்துருவத்தம்மாள் தம்பதியருக்குப் புதல்வராகப் பிறந்த திரு.கே.ஏ. சொக்கலிங்க பாகவதர் அவர்கள், இசை நாடக நடிகராகப் பாடியும் நடித்தும் புகழ் பெற்றவர். இப்போதும், தனது 90-வது வயதிலும்கூட, இசை நாடகம் நடத்திட வேண்டும் என்று தன்னிடம் வருவோருக்கெல்லாம் நாடகம் நடத்தும் முறை பற்றியும், நாடக இலக்கணம் பற்றியும் விளக்கும் அளவுக்கு அவருக்கு வலிமையும், அந்தத் துறையிலே பெரும் நாட்டமும் இருப்பது பாராட்டுக்குரியது.

திரு. கே.ஏ. சொக்கலிங்க பாகவதரின் 12-வது வயதில், அவரது பாடும் திறனைக் கேட்டு ரசித்த, காலம் சென்ற நடிகர் காளி என். ரத்தினம் அவர்கள், மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் அவரை நடிகராக இணைத்துக் கொண்டார். எமன் வேடமிட்டும், ராமராகத் தோன்றியும் பாடி பெரும் கரவொலியைப் பெற்றதை இன்றும் நினைவு கூறுகிறார், திரு. கே.ஏ. சொக்கலிங்க பாகவதர் அவர்கள்.

1937-ம் ஆண்டில் முருகன் டாக்கீசார் தயாரித்த 'ரம்பையின் காதல்' படத்தில் நடித்து, தங்கப் பதக்கம் பரிசு பெற்றுள்ளார்.

மேலும், நவாப் டி.எஸ். ராஜமாணிக்கம் பிள்ளையின் நாடகம், பால சண்முகானந்தா சபா, கே. சீனிவாச பிள்ளை கம்பெனி, சி. கன்னையா கம்பெனி - முதலிய நாடகக் குழுக்கள் நடத்திய நாடகங்களில் நடித்து புகழ் பெற்றுள்ளார்.

1989-ம் ஆண்டில் திரு. பாலுமகேந்திரா இயக்கித் தயாரித்த 'வீடு' 'சந்தியாராகம்' படங்களில் நடித்து தேசிய விருதுகளைப் பெற்ற பெருமையும் திரு. கே.ஏ. சொக்கலிங்க பாகவதருக்கு உண்டு.

இத்தனை சிறப்புக்கும் உரிய பழம் பெரும் இசை நாடக நடிகர் திரு. கே.ஏ. சொக்கலிங்க பாகவதர் அவர்களின் சேவையைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு ''கலைமாமணி'' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

இசை நாடக நடிகை

திருமதி. எம்.எஸ். ரேணுகாதேவி

மதுரை மாவட்டம், கம்பம் நகரில், 1938-ம் ஆண்டு, இசைக் கலைக் குடும்பத்தைச் சேர்ந்த திருமிகு. சுப்பாராவ் - திருமதி. கிட்டம்மாள் தம்பதியருக்குப் புதல்வியாகப் பிறந்த திருமதி. எம்.எஸ். ரேணுகாதேவி அவர்கள், தனது ஏழாவது வயதில் நடனம் பயின்று, ஒன்பதாவது வயதில் அரங்கிலும் ஏறி, அதன் பிறகு இசை நாடகத் துறைக்கு வந்தவர்.

திருவாளர்கள் கோவிந்தசாமிப் பிள்ளை, கனக சபாபதிப் பிள்ளை ஆகியோரின் நாடகக் குழுவில் சேர்ந்து பாடி நடித்துப் புகழ் பெற்றார்.

வி.ஏ. செல்லப்பா, கிட்டப்பா ஆகியோரின் சகோதரர் வி.ஏ. மகாதேவன் அவர்களைத் திருமணம் செய்து கொண்டபின், டி.டி. சங்கரதாஸ் சுவாமிகளின் இசை நாடகங்களான 'வள்ளித் திருமணம்', 'பவளக் கொடி', 'கோவலன்', 'பாமா விஜயம்', 'லலிதாங்கி', 'சாரங்கதாரா' போன்ற எண்ணற்ற நாடகங்களில் நடித்து ராஜ நடிகையாக பரிமளித்தார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் சென்று, 31 ஆண்டுகள் சுமார் 12,000 நாடகங்களுக்குமேல் நடித்துள்ள திருமதி. எம்.எஸ். ரேணுகாதேவி அவர்கள் ஏராளமான பதக்கங்களையும் பட்டங்களையும் பெற்றுள்ளார்.

திருச்சி பொன்மலையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா தலைமையில், கலைஞர், எம்.ஜி.ஆர்., கே.ஆர். ராமசாமி ஆகியோர் முன்னிலையில் 'நடிப்பு இசைச் செல்வி' என்ற பட்டத்தினை அண்ணா அவர்கள் வழங்கியதை பெரும் பேறாகக் கருதுகிறார்.

மேலும் திரு. டி.ஆர். மகாலிங்கம், திரு. திருச்சி லோகநாதன், திரு. எஸ்.எம். குமரேசன், திரு.எம்.எம். மாரியப்பா, திரு. கே.ஏ. தங்கவேலு, திரு. டி.என். தங்கப்பா, திரு. ஆர்.வி. உடையப்பா, திரு. எம்.ஆர். நாகராஜ பாகவதர், திரு. பி.எஸ். நாகராஜ பாகவதர், திரு. எம்.ஆர். முத்துசாமி, திரு. மணிமுத்து பாகவதர் போன்ற பிரபல நடிகர்களுடன் நடித்து புகழ்பெற்றுள்ள திருமதி. எம்.எஸ். ரேணுகாதேவி அவர்களின் கலைத் தொண்டினைப் பாராட்டி, தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

இசை நாடக மிருதங்கக் கலைஞர்

மதுரை திரு. இரா. குப்பண்ணா

திரு. இராமய்யர் - திருமதி. பாக்கியத்தம்மாள் தம்பதியருக்கு 1924-ம் ஆண்டு பிறந்த திரு. இரா. குப்பண்ணா அவர்கள், தனது தந்தையை ஆசிரியராகக் கொண்டு மிருதங்கம் கற்றார்.

அவரது கலைப் பணிக் காலத்தில், அவா் இணைந்து பணியாற்றிய நாடக உலக மேதைகள் பலர். தியாகி திரு. எஸ்.எஸ். விசுவநாத தாஸ், திரு.எஸ்.வி. சுப்பையா பாகவதர், திரு. வி.ஏ. செல்லப்பா, திரு. எம்.கே. தியாகராஜ பாகவதர், திரு. பி.யு. சின்னப்பா, திரு. டி.ஆர். மகாலிங்கம், திரு. ஜி. ராமநாத ஐயர், திரு. கே.எஸ். தேவுடு ஐயர், திரு. எம்.ஆர். நாகராஜ பாகவதர், திரு. எம்.ஆர். முத்துசாமி, திரு. என்.என். கண்ணப்பா, திரு. ஆர்.வி. உடையப்பா, திருமதி. டி.பி. ராஜலட்சுமி, திருமதி. எம்.ஆர். கமலவேணி ஆகியோரது நாடகங்களுக்கு மிருதங்கம் வாசித்துள்ளார்.

மதுரை வாழ் நாடக சமுதாய மக்களின் நல்வாழ்விற்காக தமிழ்நாடு நாடக நடிகர் சங்கம் என்ற அமைப்பை நிறுவி, 1957 முதல் 1963 வரை அதன் செயலாளராகப் பொறுப்பு வகித்து, நலிந்த நாடகக் கலைஞர்களின் வாழ்விற்குத் தேவையான உதவிகள் அனைத்தும் செய்துள்ளார். 1959-ம் ஆண்டு சிங்கப்பூர், மலேசியா நாடுகளுக்குச் சென்று, பல நாடக நிகழ்ச்சிகளை நடத்தி, தமிழ்நாடு நாடக நடிகர் சங்கத்திற்கு கட்டிட நிதி வசூலித்துத் தந்த பெருமையும் அவருக்கு உண்டு.

75-வது வயதில் அடியெடுத்து வைத்தபோதிலும், இன்னும் நாடக சமுதாயத்திற்கு இடையறாது பணியாற்றிவரும் திரு. இரா. குப்பண்ணா அவர்களின் கலைத் தொண்டினைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு ''கலைமாமணி'' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.



கலைமாமணி விருது பெறும்

தெருக்கூத்துக் கலைஞர்

திரு. சி. பாலகிருஷ்ணன்

10 வயது முதல் தெருக்கூத்துக் கலையில் ஈடுபட்டு, 50 ஆண்டுகளுக்கும் மேலாக அத்துறையில் சிறப்புற பணியாற்றிவரும் திரு. சி. பாலகிருஷ்ணன் அவர்கள், திரு. சின்னக் குழந்தை - திருமதி. செல்லம்மாள் தம்பதியருக்குப் புதல்வராக, திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள குண்டையார் தண்டலம் என்ற கிராமத்தைச் சேர்ந்தவராவார்.

1983-ம் ஆண்டு ஒரு கலைக் குழுவினை பதிவு செய்து, அதன் தலைவராக இன்றுவரை மிகச் சிறப்பாக பணியாற்றிவரும் திரு. சி. பாலகிருஷ்ணன் அவர்கள், மத்திய-மாநில அரசுகளின் சார்பில் மேற்கு மண்டல பண்பாட்டு மையம், தென் மண்டல கலாச்சார மையம் ஆகியவற்றின் மூலம் இந்தியா முழுவதும் ஏராளமான நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். தொலைக்காட்சி, வானொலி மூலமாகவும் புராண, இதிகாச, சமூக நாடகங்களை நடத்தியுள்ளார்.

63 வயதைக் கடந்துகொண்டிருக்கும் திரு. சி. பாலகிருஷ்ணன் அவர்கள், தெருக்கூத்துக் கலை வளருவதற்கு ஆசிரியராகவும் பணியாற்றி, பல கிராமங்களில் இக்கலை அழியாமல் காத்து வருபவர்களில் முக்கிய மானவராவார்.

தனது இடையறாத பணியினால் பல்வேறு பட்டங்களைப் பெற்றுள்ள குண்டையார் தண்டலம் திரு.சி. பாலகிருஷ்ணன் அவர்களின் கலைத் தொண்டினைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு ''கலைமாமணி'' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

கரகக் கலைஞர்

இரணியூர் திருமதி. ஏ. லட்சுமி

சிவகங்கை மாவட்டம், இரணியூர் கிராமத்தில் திரு. சேதுவாத்தியார் - திருமதி. மாரியம்மாள் தம்பதியருக்கு 1954-ம் ஆண்டு மகளாகப் பிறந்த திருமதி. ஏ. லட்சுமி அவர்கள், இளம் வயதிலேயே, பிரபல கரகக் கலைஞராக விளங்கிய தனது தந்தையையே குருவாகக் கொண்டு பயிற்சி பெற்றார். தனது 9-வது வயதில் சிறந்த கரகக் கலைஞராக நிகழ்ச்சிகளை நடத்தத் தொடங்கி, 36 ஆண்டுகளாகக் கலைச் சேவை புரிந்து வருகிறார்.

தனது 15-வது வயதிலேயே தமிழ் நாட்டில் மட்டுமல்லாது ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா, டெல்லி, அந்தமான், பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களிலும் கலை நிகழ்ச்சிகள் நடத்திப் புகழ் சேர்த்துள்ளார்.

1995-ம் ஆண்டு சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரால் மாவட்டக் கலைக் கழகத்தில் அலுவல் சார்ந்த உறுப்பினராக நியமிக்கப்பட்டு பணியாற்றியுள்ளார்.

தன் குழுவினரோடு கலை நிகழ்ச்சிகள் நடத்துவதோடு மட்டுமின்றி, பல கிராமியக் கலைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்து, திறமையான பல கரகக் கலைஞர்களை உருவாக்கிய பெருமையையும் பெற்றுள்ளார்.

இப்போதும் தொடர்ந்து கரகக் கலை நிகழ்ச்சிகளை நடத்திவரும் திருமதி. ஏ. லட்சுமி அவர்களின் கலைத் தொண்டினைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு ''கலைமாமணி'' விருதினை வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

காவடிக் கலைஞர்

திரு. எஸ். பரமசிவம்

மதுரை மாவட்டம், சாமநத்தம் கிராமத்தில், பரம்பரை பரம்பரையாக காவடி ஆட்டக் கலையில் ஈடுபட்டு வரும் குடும்பத்தில், 1938-ம் ஆண்டு பிறந்த திரு. எஸ். பரமசிவம் அவர்கள், திரு. க. சுப்பிரமணிய முதலியார் - திருமதி. அங்கம்மாள் தம்பதியரைத் தனது பெற்றோர்களாகக் கொண்டவர். மதுரை திரு. எம்.எஸ். அங்குப்பிள்ளை அவர்களிடம் பயிற்சி பெற்ற பின், மதுரை மீனாட்சியம்மன் கோவில் முன்பாக அவர் முதன் முதலாக காவடியாடியது அவரது 15-வது வயதிலாகும்.

தொடர்ந்து தமிழகத்தில் உள்ள பெரும்பாலான கிராமங்களில் ஆடியுள்ள அவர், சென்னை தொலைக்காட்சியிலும் நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியின் போதும், கலாச்சார பணி மாற்ற விழாக்களிலும் தனது நிகழ்ச்சியின் மூலம் பெற்ற பாராட்டுகளைக் குறித்து பெரிதும் பெருமைப்படும் திரு. எஸ்.பரமசிவம் அவர்கள், கிராமியக் கலைக் குழு ஒன்றினையும் அமைத்துள்ளார்.

தனது இரு புதல்வர்களுக்கு இக்கலையைக் கற்றுத் தந்து, துபாய் நாட்டில் 1997-ல் நடைபெற்ற இந்திய விழாவில் அவர்களை ஆட வைத்துள்ளார். காவடி ஆட்டக் கலையில் ஆர்வம் கொண்ட ஏராளமான மாணவர்களுக்கு பயிற்சி தருவதற்காக பள்ளி ஒன்றையும் நிறுவி சிறப்பாக நடத்தி வருகிறார்.

பாரம்பரியமிக்க காவடி ஆட்டக் கலை நலிந்துப்போய் விடக்கூடாது என்ற நோக்கத்துடன் அந்தப் பழம்பெரும் கலைக்கு திரு. எஸ். பரமசிவம் ஆற்றி வரும் கலைப் பணியை பாராட்டி அவருக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ''கலைமாமணி'' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

நையாண்டி மேள நாதசுரக் கலைஞர்

திரு. ஏ. மூக்கையா

பழம்பெரும் கிராமியக் கலைகளில் ஒன்றான நையாண்டி மேள நாதசுரக் கலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு பெரும் பணியாற்றிவரும் திரு. ஏ. மூக்கையா அவர்கள், சிவகங்கை மாவட்டம், கற்களத்தூர் கிராமத்தில், திருமிகு. அன்புடையான் - திருமதி. ரஞ்சிதம் அம்மையார் தம்பதியருக்கு 1932-ம் ஆண்டு புதல்வராகப் பிறந்தவராவார்.

தன் தந்தையாரிடம் ஆரம்பப் பாடத்தைக் கற்ற அவர், காளையார் கோயில் வித்வான் ராஜரத்தினம் பிள்ளை அவர்களிடமும் முறையாகப் பயின்று, இன்று சிறந்த நையாண்டி மேள நாதசுரக் கலைஞராகத் திகழ்ந்து வருகிறார்.

இந்தியா முழுவதும் பல மாநிலங்களில் தனது நாதசுர இசை நிகழ்ச்சிகளை நடத்திய திரு.ஏ.மூக்கையா அவர்கள், அந்தமானில் தனது நாதசுர இசைக்குக் கிடைத்த வரவேற்பை நினைவு கூர்ந்து இன்றும் பெருமைப்படுகிறார்.

67 வயது நிரம்பிய திரு. ஏ. மூக்கையா அவர்கள், இந்தக் கலையில் கொண்டுள்ள ஈடுபாட்டின் காரணமாக, பல இளைஞர்களுக்கும் கற்றுத் தந்து, இந்த நையாண்டி மேள நாதசுர இசையை தமிழகத்தின் எல்லா திசைகளிலும் ஒலிக்கச் செய்திருக்கிறார்.

இந்தப் பழம்பெரும் நாதசுரக் கலையின்மீது திரு.ஏ. மூக்கையா அவர்கள் கொண்டுள்ள ஆர்வத்துக்காகவும், அதற்காக அவர் புரிந்துவரும் தொண்டிற்காகவும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு ''கலைமாமணி'' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

நையாண்டி மேள தவில் கலைஞர்

திரு. ஆர். சுந்தரம்

தஞ்சை மாவட்டம், நன்னிலம் தாலுக்கா, திருமருகல் கிராமத்தில், திருமிகு. டி.எஸ். ராஜமாணிக்கம் - திருமதி. முத்துலட்சுமி தம்பதியருக்குப் புதல்வராக 1954-ம் ஆண்டு பிறந்த திரு. ஆர். சுந்தரம் அவர்கள், அவரது பெரிய தந்தையாரான திரு. டி.எஸ். ஆறுமுகம் பிள்ளையிடம் மாணவராகச் சேர்ந்து தவில் பயிற்சி எடுத்துக் கொண்டவர்.

அந்தக் கலையில் அவருக்கிருந்த ஈடுபாட்டின் காரணமாக, தனது 12-வது வயதில் முழுதும் தேர்ச்சி பெற்று, நாதசுர மேதையான தனது தந்தையாருக்கே தவில் வாசிக்கத் தொடங்கினார்.

அந்த அனுபவத்தின் துணைகொண்டு சேலம் நகருக்கு இடம் பெயர்ந்து, 20 பேர் கொண்ட 'கோல்டன் இசைக் குழு' ஒன்றை நிறுவி, அதில் சிறப்பாக தவிலிசையைத் தந்து வருகிறார்.

அரசு நிகழ்ச்சிகள் - கோயில் திருவிழாக்கள் - திருமறை வைபவங்கள் - என்று தொடர்ந்து நாதசுர இசைக்கு தவில் வாசித்துவரும் திரு.ஆர். சுந்தரம் அவர்கள், சென்னை தொலைக்காட்சியிலும், வானொலி நிலையத்திலும் தொடர்ந்து தவில் வாசித்து வருகிறார்.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் எண்ணற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ள திரு. ஆர். சுந்தரம் அவர்கள், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கும் சென்று தன் கலைப் பணியை செய்திருக்கிறார்.

ஏராளமான பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றிருக்கிற திரு.ஆர். சுந்தரம் அவர்களின் கலைச் சேவையைப் பாராட்டி, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், அவருக்கு ''கலைமாமணி'' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

கிராமியப் பாடலாசிரியர்

திரு. நா. கருமுத்து தியாகராஜன்



திருமிகு. நாகுப்பிள்ளை - திருமதி. சாரதாம்பாள் தம்பதியருக்குப் புதல்வராக, 1931-ம் ஆண்டு பிறந்த திரு. நா. கருமுத்து தியாகராஜன் அவர்கள், இதுவரை ஏறத்தாழ 1500 கிராமியப் பாடல்களை எழுதியிருக்கிறார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் ஆடி விழாக்களில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளில் ஆன்மீகவாதியான தனது தந்தையாருடன் கலந்து கொண்டதாலும், சிறப்புமிக்க நாடக நடிகர் பலர் அவரது தந்தையின் நண்பராக இருந்த காரணத்தாலும், அடிக்கடி அவர்களது நிகழ்ச்சிகளைப் பார்க்கின்ற - கேட்கின்ற வாய்ப்புகள் கிடைத்ததாலேயே இவ்வளவு கிராமியப் பாடல்களை தன்னால் இயற்ற முடிந்தது என்கிறார், திரு. நா. கருமுத்து தியாகராஜன் அவர்கள்.

தமிழகத்தின் கலைத் துறையில் புகழ்பெற்ற பலர் முன்னிலையில் கவி அரங்கங்களில் பங்கு பெற்று பாடியதும், ஏராளமான கிராமங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மேடைகளில் வேடங்கள் புனைந்து கிராமியப் பாடல்களைப் பாடிய அனுபவங்களுமே திரு. நா. கருமுத்து தியாகராஜன் அவர்களின் புகழுக்குக் காரணமாகும்.

மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமை, தீண்டாமை - இவற்றை வலியுறுத்தும் கிராமியப் பாடல்களை தானே இயற்றி, தமிழக அரசின் சார்பாக சுற்றுலாத் துறையின்மூலம் பல கிராமங்களின் நிகழ்ச்சிகளாக நடத்திய திரு. நா. கருமுத்து தியாகராஜன் அவர்கள், 1988-ம் ஆண்டு இரண்டு கிராமியப் பாடல் தொகுப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

அவரது கலைப் பணியைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு ''கலைமாமணி'' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

கிராமிய இசைக் கலைஞர்

திருமதி. எஸ். சரஸ்வதி

பழம்பெரும் கிராமிய இசைக் குடும்பத்தில், 1967-ம் ஆண்டு பிறந்த திருமதி. எஸ். சரஸ்வதி, குமரி மாவட்டம், சுண்டபற்றிவிளை கிராமத்தில் 1953-ம் ஆண்டு பிறந்தவர்.

திரு. சோமசுந்தரப் புலவர் அவர்களிடம் கிராமிய இசைப் பாடல் மற்றும் வில்லிசையையும் கற்றுக் கொண்டார்.

34 வருட அனுபவம் கொண்ட திருமதி. எஸ். சரஸ்வதி அவர்கள், சாஸ்தா வரலாறு, முத்தாரம்மன் கதை, சுடலைமாடன் சரித்திரம், கம்சன் அவதாரம், விராட பர்வம், கிருஷ்ணன் விடு தூது, வீர அபிமன்யு, கர்ணன் போர், இராமர் பிறப்பு, சீதா கல்யாணம், அஸ்வமேத யாகம், நாராயணி வரலாறு, மார்க்கண்டேயன், பக்த குசேலா, அரிச்சந்திரா, சிறுத்தொண்ட நாயனார், பாரி மகளிர், திரௌபதை சுயம்வரம், உச்சி மாகாளி கதை, பத்திரகாளி அம்மன் கதை, மாரியம்மன் கதை, இசக்கி அம்மன் கதை, பல வேஷக்காரன் கதை, பிரம்ம சக்தி அம்மன் கதை- போன்ற ஏராளமான கிராமிய, புராண, இதிகாசக் கதைகளை இசைப் பாடல்களாகவும் வில்லிசையாகவும் பாடி இருக்கிறார்.

இவை மட்டுமின்றி, அரசு திட்டங்களான இருபது அம்சத் திட்டம், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம், கல்வி, சிறு சேமிப்பு, குடும்ப நலச் சுகாதாரம், குழந்தைகள் நலம் மற்றும் இந்திய சுதந்திர வரலாறு - போன்ற பல்வேறு தலைப்புகளிலும் இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார்.

தொலைக்காட்சி, வானொலி, பள்ளிகள், கோவில்கள் போன்ற பல்வேறு இடங்களிலும் நிகழ்ச்சிகள் நடத்தி, பட்டங்களையும் பரிசுகளையும் பெற்றிருக்கும் திருமதி. எஸ். சரஸ்வதி அவர்களின் தொண்டினைப் பாராட்டி தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் அவருக்கு ''கலைமாமணி'' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

கலைமாமணி விருது பெறும்

வில்லிசைக் கலைஞர்

திருமதி. கழுகுமலை ஜி. முத்துலட்சுமி

பல்வேறு இசைக் கருவிகள் இருந்தாலும், கிராமிய பாமர மக்களை வெகுவாக ஈர்த்துவிடக் கூடிய சக்தி வில்லிசைக்கு நிச்சயம் உண்டு என்று தன் அனுபவத்தின் வாயிலாக உணர்ந்ததாகக் கூறும் வில்லிசைக் கலைஞர் திருமதி. ஜி. முத்துலட்சுமி அவர்கள், திருமிகு கே. கண்ணுசாமி - திருமதி. முத்தம்மாள் தம்பதியருக்குப் புதல்வியாக 1960-ம் ஆண்டு பிறந்தவராவார்.

பாரதி பிறந்த தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் இவர் பிறந்த ஊர். இவருக்கு வில்லிசைப் பயிற்சியைத் தந்த தந்தையாரே, இவரது 13-வது வயதில் பனையூர் என்ற கிராமத்தில் அரங்கேற வைத்தார்.

வில்லிசையின் மூலம் வெளிவரும் கருத்துக்கள் அனைத்துமே எளிதில் மக்களைச் சென்றடையும் என்ற காரணத்தால், பல சமுதாயப் பணிகளையே தனது வில்லிசையின் மூலமாக ஆற்றிவரும் திருமதி. ஜி. முத்துலட்சுமி அவர்கள், தமிழகத்தின் அனைத்து வானொலி நிலையங்களிலும், தொலைக்காட்சியிலும் நிகழ்ச்சிகள் வழங்கியுள்ளார்.

தஞ்சை, தென்னகப் பண்பாட்டு மையத்தின் சார்பில் பாண்டிச்சேரி கலை விழா, மற்றும் மாமல்லபுரம் இசை விழாவிலும் நிகழ்ச்சிகள் நடத்தியுள்ள அவர், சென்னை கிராபட் பவுண்டேஷன் அமைப்பின் சார்பில், சென்னையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பள்ளிகளில் வில்லிசை பற்றி விரிவுரை நடத்தி, ஏராளமான மாணவியருக்கு வில்லிசை பயிற்சியும் தந்துள்ளார்.

புதுடெல்லி தமிழ்ச் சங்கத்தின் கலாச்சார விழாவில் அவரது வில்லிசை நிகழ்ச்சி பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.

இந்திய அரசின் நேரு யுவகேந்திரா சார்பில் ''எயிட்ஸ் விழிப்புணர்வு'' நிகழ்ச்சிகளையும் தனது வில்லிசை மூலம் நடத்தி பெரும் தொண்டாற்றி வரும் திருமதி. கழுகுமலை ஜி. முத்துலட்சுமி அவர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் ''கலைமாமணி'' விருது வழங்கிச் சிறப்பிக்கிறது.

சிறந்த கலை நிறுவனத்திற்கான கேடயம் பெறும்

கம்பன் கழகம்

சென்னை

கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழ் வளர்ப்பதையே தம் கொள்கை எனக் கொண்டிருந்த கம்பன் அடிப்பொடி அவர்களால் இருபது ஆண்டுகட்கு (1975) முன்னர் தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் தொடங்கி வைக்கப் பெற்றது, இச் சென்னை கம்பன் கழகம். அன்று முதல் ஆண்டுதோறும் ஆகஸ்டுத் திங்கள், இரண்டாவது சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, அதற்கு முந்திய வெள்ளிக்கிழமை ஆகிய மூன்று நாட்களிலும் மயிலாப்பூர் ஏ.வி. எம். இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் கம்பன் விழா நடைபெற்று வருகிறது.

தமிழகம் மட்டுமல்லாது, இந்தியா மற்றும் வெளி நாடுகளிலிருந்தும் முத்தமிழ்த் துறை சார்ந்த அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள் பலர் பங்கேற்று ஆயிரக் கணக்கான இலக்கிய ர்சிகப் பெருமக்களுக்கு இன்பமூட்டி விழாவினை பயனுள்ளதாக்கி வருகின்றனர். முதல் நாளில் விழா மங்கலம், இரண்டாம் நாளில் கவியரங்கம், தமிழ்ச்சோலை கருத்தரங்கம், மூன்றாம் நாளில் விவாத மேடை, பட்டி மண்டபம் முதலியன நடைபெறுகின்றன.

முதல் நாள் விழாமங்கலப் பேரவையில் ஆண்டுதோறும் தமிழுக்குத் துறைதோறும் தொண்டாற்றிய பல்வேறு துறை அறிஞர் பெருமக்கள் இருவரைக் கம்பன் கழகம் பாராட்டி கௌரவித்து மகிழ்கின்றது. இது தவிர கம்பன் அடிப்பொடி பரிசில், மர்ரே எஸ். ராஜம் பரிசில், இரா. இராதாகிருஷ்ணன் பரிசில் போன்ற ஆறு பரிசில்களுக்கு தமிழ்ப் பெருந்தகைகளைத் தேர்ந்தெடுத்துப் பரிசில் அளித்து மகிழ்கின்றது.

தமிழகம் முழுதும் உள்ள கல்லூரி மாணாக்கர்களுக்காக அவர்கள் இலக்கிய மூலத்தைப் படிக்க வேண்டும் என்ற பேரவாவினால், திருக்குறள், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், பெரிய புராணம், சீறாப்புராணம் ஆகிய இலக்கியங்களில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி முதலியவற்றை நடத்தி வருகிறது.

கழகத்தின் துணைத் தலைவராக இருந்து கழகத்திற்குப் பல்லாற்றானும் உதவிய பெருந்தகை அமரர் ஏ.வி. மெய்யப்பன் அவர்கள் நினைவாக, ஏ.வி. எம். குடும்பத்தினரின் உதவியுடன் ஆண்டுதோறும், பதின்மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து அறக்கட்டளைச் சொற்பொழிவு ஒன்றினை, கம்பராமாயணத்திலிருந்து ஒரு புதிய கூறைப் பற்றி, தக்க ஒரு அறிஞரைக் கொண்டு நிகழ்த்தி, அச்சொற்பொழிவினை அவ்வாண்டுக் கம்பன் விழாவிலேயே நூல் வடிவிலும் கொண்டு வந்து, தமிழுக்குப் புதிய ஆய்வு நூல்களைச் சேர்த்துவரும் பெருமையுடையது இக்கம்பன் கழகம்.

கம்பன் கழகத்தின் தலையாய பணியானது, தமிழ் இலக்கிய உலகுக்குப் புதிய இளைஞர்களை வாரிசாக உருவாக்கி வருவது ஆகும். ஆண்டுதோறும் போட்டிகள் நடத்தி, திறமையுடைய மாணாக்கர்களை தக்க அறிஞர்களை நடுவர்களாக அமர்த்தி தேர்வு செய்து, பரிசு வழங்குவதோடு, பயிற்சியும் அளித்து, அவர்களுக்கு எனத் தனியே கம்பன் விழாவில் ஒருவேளை நிகழ்ச்சியை முழுமையாக ஒதுக்கி, மேடையேற்றி, அவர்களை ஊக்குவித்து, நாடறிந்த இலக்கியச் சொற்பொழிவாளர்களாக உருவாக்கி வருகின்றது இக் கம்பன் கழகம். இவர்களில் குறிப்பிடத் தகுந்தோர் இன்று புகழ் பெற்ற வழக்கறிஞர்களாக உள்ள திரு. த. இராமலிங்கம், திரு. இராம சுப்பிரமணியம், திருமதி. கே. சுமதி, மருத்துவர் திருமதி. சுதா சேஷய்யன், திரு. சீ. திருமகன், திரு. த.கி. நீலகண்டன், திருமதி. கே. ஹேமா, திருமதி. பாரதி பாஸ்கர், திருமதி. பிரேமா குமார், திருமதி. பர்வீன் கல்தானா, திருமதி. சுபா சுந்தர், செல்வி. ந. விஜய சுந்தரி, செல்வி. ச. ஜெயஸ்ரீ, திரு. இரா. பத்ரி நாராயணன், திரு. பால சீனிவாசன், திரு. சொ. சேதுபதி ஆவர்.

பதிவு செய்யப் பெற்ற அமைப்பான கம்பன் கழகத்தின் தலைவராகத் தொடக்கம் முதல் இருந்து பணியாற்றி வருபவர் சென்னை உயர் நீதிமன்ற முன்னைத் தலைமை நீதிபதி கலைமாமணி திரு. மு.மு. இஸ்மாயில் ஆவார். துணைத் தலைவர்களாக தொழிலதிபர்கள் கோவை. திரு. ஜி.கே. சுந்தரம், சென்னை திரு. ஏவி.எம். சரவணன் ஆகியோர் பெருமை கூட்டுகின்றனர். கம்பன் அடிப்பொடியின் மாணாக்கரான திரு. பழ. பழநியப்பன் செயலாளராகத் தொண்டாற்றி வருகின்றார்.

சுழற் கேடயம் பெறும்

சிறந்த நாடகக் குழு

திரு. தில்லைராஜன் அவர்களின்

''நாடக மந்திர்''

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

''பொன்னி'' 31, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை, சென்னை - 600 028.

மன்றத்தின் பணிகள் பற்றிய அறிக்கை

உலகம் புகழும் தமிழ்க் கலைகளைப் பொலிவோடும், புதுமைகள் மலரப் பேணிக் காத்திடவும், மத்திய சங்கீத நாடக அகாதெமியின் கலைத் திட்டங்களை, நோக்கங்களை மாநில அளவில் செயற்படுத்தவும், தமிழக அரசால் 1955-ஆம் ஆண்டில், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்ட இம்மாமன்றத்திற்கு 1973-ஆம் ஆண்டில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால், ''தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்'' எனப் பெயர் சூட்டப்பெற்றது.

இக்கலை நிறுவனம், கடந்த 44 ஆண்டுகளாக, இயல், இசை, நாடகம், நாட்டியம், திரைப்படம் மற்றும் கிராமியக் கலை ஆகிய பாரம்பரியமிக்க கலைகளுக்குப் புத்துயிர் அளித்துப் பேணிப் பாதுகாக்கவும், கலைஞர்களை ஊக்கப்படுத்தவும், பின்வரும் தமிழக அரசின் உயர்ந்த கலைத் திட்டங்களைச் செயலாற்றிடவும் மக்களிடையே அவை மலர்ந்து மிளிரவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

மாநிலங்களுக்கிடையே கலைக்குழுக்கள் பரிவர்த்தனைத் திட்டத்தின்கீழ், பிற மாநிலங்களுக்குக் கலைக்குழுக்களை அனுப்புதல், பிற மாநிலக் கலைக் குழுக்களை வரவேற்று கலை நிகழ்ச்சிகள் நடத்தி, இந்தியப் பண்பாட்டையும், தேசிய ஒருமைப்பாட்டுறவையும் மேம்படுத்துதல், நலிந்த கலைஞர்களுக்குத் திங்கள்தோறும் நிதியுதவி அளித்தல், மறைந்த கலைஞர்களின் குடும்பங்களுக்குக் குடும்ப நல நிதி வழங்குதல், தகுதி வாய்ந்த இளங் கலைஞர்களை ஊக்குவித்தல், கலைத்துறைச் சாதனையாளர்களைக் கண்டறிந்து 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பித்தல், தமிழ்ப் பண்பாட்டை மேம்படுத்தும் கருத்தமைந்த நாடகங்களை உருவாக்க, நாடகக் கலைக் குழுக்களுக்கு மானியம் வழங்குதல், பழம் பெருமை வாய்ந்த தோற்பாவைக் கூத்து, பொம்மலாட்டம் போன்ற புராதனக் கலைகள் அழிந்துபடாமல் பாதுகாத்திட அக்குழுக்களுக்குப் புதிய படைப்புகளை உருவாக்கிடத் தாராளமாக நல்கைகள் வழங்குதல்,. அருங்கலை நூல்களை வெளியிட நிதியுதவி அளித்தல், கலைப் பேரறிஞர்களின் நினைவு

விழாக்களைக் கொண்டாடுதல், கலை வளர்க்கும் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு நல்கை வழங்குதல், தொன்மைச் சிறப்பு வாய்ந்த கலைப் படைப்புகளை வருங்காலச் சந்ததியரின் நலனுக்காக ஆவணமாக்குதல், கலைஞர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் பயன்பாட்டிற்காக பழம்பெரும் இசை, நாட்டிய, நாடக நூல்களைச் சேகரித்து நூலகத்தைப் பராமரித்தல், நுண்கலைகள் சம்பந்தமான சொற்பொழிவுகள் மெய்ப்பித்துக் காட்டும் நிகழ்ச்சிகளை நடத்துதல், கவின்மிகு நுண்கலை, மரபுவழி ஊரகக் கலை ஆய்வுகளுக்கு ஊக்கமளித்தல், பழம்பெரும் ஊரகக் கலைகளைப் பேணிக் காக்கும் பொருட்டுக் கலைஞர்களுக்கு ஆடை, அணிகலன்களைப் புதிதாகப் பெற நல்கை அளித்தல், தொழில்முறைக் கலைஞர்கள் தாங்கள் பங்குபெறும் வெளியூர் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் பொருட்டு, இருப்பூர்தியில் கட்டணச் சலுகையில் பயணம் செய்யச் சான்று வழங்குதல், நாடகக் கலைஞர்கள் தமிழகத்தில் தாங்கள் பங்குபெறும் வெளியூர் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் பொருட்டுத் தமிழக அரசுப் பேருந்தில் சலுகைக் கட்டணத்தில் பயணம் செய்யச் சான்று வழங்குதல், அரசு இசைக் கல்லூரிகள், தமிழ்நாடு திரைப்பட-தொலைக்காட்சித் தொழில்நுட்ப நிறுவனம், மற்றும் பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றில் கலை பயிலும் திறன்மிக்க மாணவ, மாணவியர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்குதல் - ஆகிய சீரிய பணிகளை, இம்மாமன்றம் செம்மையுறச் செயற்படுத்தி வருகின்றது.

இம்மன்ற விழாக்களில் தலைசிறந்து விளங்குவது இந்நன்னாளில் நிகழ்ந்துகொண்டிருக்கும் ''கலைமாமணி'' விருது வழங்கும் விழாவாகும்.

இயல், இசை, நாடக, நாட்டிய, திரைப்பட மற்றும் ஊரகக் கலைகளில் புகழோடு விளங்கும் பழம்பெரும் கலைஞர்களுக்கும், போற்றுதற்குரிய சாதனைகள் படைக்கும் இன்றைய கலைஞர்களுக்கும் தமிழக அரசின் சார்பில் மன்றம் 'கலைமாமணி' விருது வழங்கிச் சிறப்பிக்கின்றது. இதுகாறும் 1062 கலைஞர்களுக்கு 'கலைமாமணி' விருது வழங்கப் பெற்றுள்ளது.

'கலைமாமணி' விருதுபெற்று நலிவுற்ற நிலையில் வாழ்ந்துவரும் கலைஞர்களுக்குப் பொற்கிழி (பணமுடிப்பு) வழங்கும் வகையில், இதுவரை 147 கலைஞர்களுக்குத் தலா ரூ. 1,000/- வீதமும், 17 கலைஞர்களுக்குத் தலா ரூ.5,000/- வீதமும், 11 கலைஞர்களுக்குத் தலா ரூ. 10,000/- வீதமும்

பொற்கிழியாக வழங்கப்பெற்றுள்ளது. மேலும், கடந்த ஆண்டு முதல், விருது பெறும் கலைஞர்களுக்கு 3 சவரன் எடையுள்ள பொற்பதக்கம் வழங்கப்பட்டு வருகின்றது.

கலை வளர்ச்சிக்குப் பாடுபட்டுவரும் தன்னார்வக் கலை நிறுவனங்களையும், செம்மையுறச் செயற்பட்டுவரும் நாடகக் குழுக்களையும் பாராட்டும் வகையில், இதுவரை 20 கலை நிறுவனங்களுக்கும், 13 நாடகக் குழுக்களுக்கும் கேடயம் மற்றும் சுழற்கேடயம் வழங்கப்பெற்றுள்ளன.

மாநிலங்களுக்கிடையே கலைக் குழுக்கள் பரிவர்த்தனைத் திட்டத்தின்கீழ் எண்ணற்ற தமிழகக் கலைக் குழுக்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் அனைத்து மாநிலங்கட்கும் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்திடவும், பிற மாநிலக் கலைக் குழுக்களை வரவேற்று மைய-மாநில அரசுகளின் உதவியோடு தமிழகத்தில் அக்குழுக்களின் கலை நிகழ்ச்சிகள் நடத்திடவும் மன்றத்தால் ஏற்பாடு செய்யப்படுகிறது.

நடப்பாண்டில் பஞ்சாப் மற்றும் உத்திரப் பிரதேச மாநிலக் கலைக் குழுக்களைத் தமிழகத்திற்கு வரவேற்று, அக்குழுக்களின் கலை நிகழ்ச்சிகளை, சென்னை மற்றும் மாவட்டத் தலைநகர்களில் சிறப்பாக நடத்திடப்பட்டுள்ளது.

மேலும், தமிழகக் கலைக் குழுக்களை, திரிபுரா, பஞ்சாப் மற்றும் அரியானா ஆகிய மாநிலங்கட்கு அனுப்பி வைக்கவும், திரிபுரா மாநிலக் கலைக் குழுக்களைத் தமிழகத்திற்கு வரவேற்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

வாழ்நாள் முழுதும் கலைப்பணியாற்றி அகவை முதிர்ந்து நலிந்து வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. இதுகாறும் 5067 கலைஞர்கள் திங்கள் தோறும் ரூ.500/- தொகையை நிதியுதவியாகப் பெற்று வருகின்றனர். இத்திட்டம் இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்தில் மட்டுமே சிறப்புறச் செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். 1997-98 ஆம் ஆண்டிற்கு மேலும் 500 கலைஞர்களுக்கு நிதியுதவி ஒப்பளிக்க மன்றம் அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளது.

புகழ்மிக்க கலைஞர்களின் மறைவினால், கலங்கித் தவிக்கும் குடும்பத்தாருக்கு ரூ.3,000/- வீதம் குடும்ப நல நிதி வழங்கப்படுகின்றது.

இவ்வகையில், இதுகாறும் 181 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. இக்குடும்ப நல நிதியை ரூ.3000/-லிருந்து ரூ.5000/-தொகையாக உயர்த்தி வழங்கவும், கடந்த ஆண்டு கலைமாமணி விருது வழங்கும் விழாவில் அறிவித்தபடி, குடும்ப நல வைப்பு நிதியாக இருந்த ரூ.4.70 இல்ட்சத்தை ரூபாய் பத்து இலட்சமாக உயர்த்தி வழங்கவும் ஆணை பிறப்பித்துள்ள மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு மன்றம் தனது பணிவார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பல்வேறு நிகழ்ச்சிக் கலைக் கூறுகளைச் சார்ந்த புத்திளங் கலைஞர்களைக் கலை உலகிற்கு அறிமுகம் செய்து ஊக்குவிக்கும் வண்ணம், அக்கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கெனத் தன்னார்வக் கலை நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுகாறும் 1550-க்கும் மேற்பட்ட இளம் கலைஞர்கள் பயன்துய்த்துள்ளனர்.

நாடகக் கலையை மேம்பாடு அடையச்செய்யும் பொருட்டு, நாடு, மொழி, கலை, பண்பாடு, நாகரீகம் ஆகியவற்றிற்கு உயர்வளிக்கவும், அறநெறி நல்வாழ்வுக் கருத்துகளோடு பின்னிப் பிணைந்ததாகவும் உள்ள நாடகப் படைப்புகளை அரங்கேற்றும் தமிழ் மேடை நாடகக் குழுக்களுக்கு உதவும் வண்ணம் மன்றம் தாராளமாக நல்கை வழங்கி வருகின்றது. இத்திட்டத்தினால் 50-க்கும் மேற்பட்ட நாடகங்கள் உருவாக்கப்பெற்று, எண்ணற்ற கலைஞர்கள் பயன்துய்த்துள்ளார்கள்.

அருங்கலையில் அரிய நூல்களை வெளியிடும் நூலாசிரியர்களுக்கு மன்றம் நூற்பதிப்பு மானியம் வழங்கி வருகின்றது. இதுகாறும் இத்திட்டத்தின்கீழ், 100-க்கும் மேற்பட்ட அரிய கலை நூல்கள் மன்ற நிதியுதவியுடன் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பெற்றுள்ளன.

கலை வளர்ச்சிக்குப் பாடுபட்டு மறைந்தும் மறையாத புகழோடு விளங்கிவரும் கலைப் பேரறிஞர்களான ''நாடகத் தந்தை'' தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், ''கலைவாணர்'' என்.எஸ். கிருஷ்ணன், ''நாடகப் பேராசிரியர்'' பம்மல் சம்பந்தனார், ''சாகித்திய கர்த்தா'' பாபநாசம் சிவன், ''நாதசுரச் சக்கரவர்த்தி'' டி.என். இராசரத்தினம், ''நாடக மேதை'' நவாப் ராசமாணிக்கம், ''காயக சிகாமணி'' அரியக்குடி இராமானுசம் ஆகியோரின் நினைவு நாள் விழாக்களை மன்றம் நடத்தி வருகின்றது.

இவ்வகையில், ''நாடக மேதை'' ஔவை டி.கே.சண்முகம், நாட்டியக் கலா கேசரி வழுவூர் வி.பி. இராமையா பிள்ளை, ''இசையரசு'' எம்.எம். தண்டபாணி தேசிகர், வயலின் மேதை கும்பகோணம் இராசமாணிக்கம் ஆகியோரின் நினைவு விழாக்களையும் நடத்திட உள்ளது.

கலை வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்குப் பயன்படும் வண்ணம் புதிய நூல்கள் வாங்கப்பெற்று மன்ற நூலகம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

நலிந்த கிராமியக் கலைஞர்களுக்கு, இசைக் கருவிகள், ஒப்பனைச் சாதனங்கள் ஆகியன புதிதாக வாங்கிடும் பொருட்டு மன்றத்தால் நல்கை வழங்கப்பட்டு வருகின்றது. சென்ற ஆண்டில், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், அனைத்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் முன்னிலையில், தமிழகத்தின் அனைத்து மாவட்டக் கிராமியக் கலைஞர்களுக்கும் அரங்காடை, கலைச் சாதனங்கள் வாங்க நிதிஉதவி வழங்கப்பட்டதில் இதுவரை 300-க்கும் மேற்பட்ட கிராமியக் கலைக் குழுக்கள் பயன் பெற்றுள்ளன.

புகழ்பெற்று விளங்கும் இளம் பரத நாட்டியக் கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வழங்கும் வகையில், மன்றம், நாட்டியக் கலைவிழாவையும் நடத்தி வருகின்றது.

கிராமியக் கலைகளுக்குப் புத்தியிர் அளிக்கவும், கிராமியக் கலைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் தமிழகத்தின் முக்கியத் தலைநகரங்களில் கிராமியக் கலை விழாவை மன்றம் சிறப்புற நடத்தி வருகின்றது. இவ்வகையில் நடப்பாண்டில் விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் சிறப்பாகக் கிராமியக் கலை விழா நடத்தப் பெற்றது.

மேலும், வரும் பிப்ரவரித் திங்களில், தமிழகத்தில் அனைத்திந்திய கிராமியக் கலை விழாவினை அரசு சார்பில், சிறப்புடன் நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

நாடகக் குழுக்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில், வெளியூர்களில் நாடகம் நடத்தச் செல்லும் கலைக்குழுக்களுக்கு அரசுப் பேருந்துகளில்

கட்டணச் சலுகையில் பயணம் செய்ய அனுமதிக்கப் பெறுகிறது. இதனால் நாள்தோறும் பல நாடகக் கலைஞர்கள் பயன் துய்த்து வருகின்றனர்.

அரசு இசைக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் பயிலும் ஏழ்மை நிலையில் உள்ள திறம்படைத்த மாணவர்கட்குப் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தினை மன்றம் செம்மையுறச் செயற்படுத்தி வருகின்றது.

கடந்த ஆண்டிலிருந்து மன்றத்தால் செயற்படுத்தப்பட்டுவரும் சிறப்புக் கலைத் திட்டங்கள்

1. இசை, நடனம் ஆகிய கலைகளைக் கற்றிட முன்வரும் ஆர்வம் உள்ள 10 வயதிலிருந்து 12 வயது வரையிலான 100 இளம் சிறார்களுக்குப் படிப்புதவித் தொகையாகத் திங்கள்தோறும், தலா ரூ.200/- வீதம் உதவித்தொகை வழங்கும் திட்டத்தை மன்றம் செயற்படுத்தி வருகிறது.

2. தமிழிசையில் ஆர்வமுள்ள ஆய்வாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், கடந்த ஆண்டிலிருந்து 10 சிறந்த தமிழிசை ஆய்வாளர்களுக்குத் திங்கள்தோறும் ரூ.1,000/- வீதம் ஆய்வு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

3. மலைவாழ் மற்றும் பழங்குடியினரின் கலைக் கூறுகளை, பண்பாட்டினை இளைய தலைமுறையினருக்காக ஆவணமாக்கிப் பாதுகாக்கும் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில், கொல்லிமலை மற்றும் உதகையில் வாழும் பழங்குடியினரின் கலைக் கூறுகள் ஒளிநாடாவில் படமாக்கப்பட்டு, மன்ற களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. பல ஆண்டுகளாக கண்டு நாடாக்களின் வாயிலாகப் பல்வேறு நிகழ்ச்சிகள், விழாக்கள் போன்ற சந்தர்ப்பங்களில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள அரிய புகழ்பெற்ற கலைமேதைகளின் இசை, நடன நிகழ்ச்சிகளைக் கலை விற்பன்னர்கள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காகச் சிறிய ஒலி நாடாக்களில் பதிவு செய்யும் பணியை மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

5. மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் அரிய ஆலோசனைப்படி, பூம்புகாரில் இந்திர விழா நடத்திட முடிவு செய்யப்பட்டு, கடந்த இரண்டு

ஆண்டுகளாக சித்திரை முழு நிலவையொட்டி, இயல் விழா, இசை விழா, நாடக விழா என மூன்று நாட்கள் இந்திர விழா சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது.

6. மன்ற அலுவலகம் இயங்கிவரும் 'பொன்னி' வளாகத்தில் ஒரு நவீனக் கலைக்கூடம் கட்டுவதற்கான முழுமுயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது. பழம்பெரும் இசைக்கருவிகள், இயல், இசை, நடனம், நாடகம், கிராமியக் கலைகள், திரைப்படம் சார்ந்த நூல்கள் ஆகியவற்றைக் கொண்ட ஆராய்ச்சிக் கூடமாகவும், மற்றும் தற்கால நவீன ஒலி-ஒளி சாதனங்கள் நிறைந்த சுமார் ஆயிரம் இருக்கைகள் கொண்ட கலையரங்கமும் இடம் பெறத்தக்க முறையில், கலைக்கூடம் அமைவதற்கான பணிகளையும் மன்றம் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது.

7. பிற மாநிலத் தலைநகரில், தமிழ்க் கவின் கலைக் கண்காட்சி மற்றும் கலை நிகழ்ச்சிகளை நடத்திடத் திட்டமிட்டு, சென்ற ஆண்டில், தில்லித் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து புதுதில்லியிலும், கல்கத்தா, பாரதி தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து கல்கத்தாவிலும் கலை விழாக்கள் நடத்தப்பட்டுள்ளது.

8. நடப்பாண்டிலிருந்து கலைஞர்கள், கலை விற்பன்னர்களின் பயன்பாட்டிற்காக ''முக்கனித் தமிழ்'' எனும் மும்மாத இதழ் வெளியிடப்பட்டு வருகின்றது.

9. தமிழகத்தின் அனைத்துப் பாணியைச் சார்ந்தத் தொன்மைச் சிறப்புமிக்க தெருக்கூத்துக் கலைக் குழுக்களை ஒன்று திரட்டிப் பெரிய அளவில் கூத்துவிழா நடத்தி, அக்கலைவடிவினை ஆவணமாக்கிப் பாதுகாத்திட தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் முனைப்புடன் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்.